# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம்:— தாதுஞு தை மீ கஉ௨ (1937 ஜனவரி 25) திங்கக்கிழமை { இலக்கம்—எகூ


## புடைவை வியாபாரியும் கமக்காரனும் ஹரிஜனநேசனும்

புடைவை வியாபாரியும் கமக்காரனும் என்னுந் தலைமைப்பெயர் பூண்டதொரு சம்பாஷணையை 29-10-36-ல் வெளிவந்த இந்துசாதனத்தில் கண்டதாக 29-11-36ல் வெளிவந்த ஈழகேசரியில் தோற்றிய ஹரிஜனநேசன் ஷை இருவருக்குமிடையில் புகுந்து, ஏதோ மயக்கமாயிருக்கென்று இடருறுகின்றார். ஆகவே அவர் மயங்கி இடருறுவண்ணம் கீழே தருஞ் சமாதானங்களால் நீங்குவாராக.

ஷை கேசரியின் 1ம் பந்தியில் எவருடைய கையொப்பமுமின்றி வேறெவ்விதக் குறிப்புமற்று அச் சம்பாஷணை முடிவுற்றமையால் அஃது இதழாசிரியரால எழுதப்பட்டதாகுமென நாமெண்ணினோம். எனினும் பல வழுச்சொற்களைப்புணர்த்தி மயங்கவைத்து அறிவுசான்ற ஆசிரியர் அதனைவெளியிட மாட்டாரெனத் துணிந்து அதன்கண்ணுள்ள பொருத்தமற்ற கருத்துக்களைச் சிறிது ஆராயுமாறே இதனை எழுதலானேமென்கிறார்.

சமாதானம் ஆராயப்புகுந்த ஹரிஜனநேசன் தனது வழுஉக்களையும் மயக்கங்களையும் ஏனையோர் அறிய மாட்டாரென்றே பலர்கூடி எழுதிய விஷயவசனங்களுக்குக் ஹரிஜனநேசன் என ஒருவரின் கையொப்பமிடலாயினர். இவரது ஆராய்வு இழுவு சொல் மாற்றக்கூடிய கூட்டத்தில பேரிழவுசொன்ன கூட்டத்தலைவரை நிகர்த்த ஆரம்பத்தில், பிறர் குற்றஞ் சொல்ல எழுந்த அவ்வசனங்களிலேயே தான குற்றவாளியானுரென அறிவாராக.

2ம் பந்தியில் "ஓர் கமுகந்தோட்டத்தில் வாழை தென்னை பலா முதலிய சில மரங்கள் நின்றபோதிலும் அதனைக் கமுகந் தோட்டமெனல் பொருந்தாது என்று யாரேனுங் கூறுவாரா? இல்லை" என்கிறார்............... சமாதானம்-சரி அது கமுகந்தோட்டந்தான். அதற்குள் நிற்கும் பலாமரத்தைச் சுட்டி, "இது என்ன மர"மென்று கேட்டால் இது பலாமரமென்பதைவிட இது கமுகந் தோட்டமரமென்பாரு முளரோ. அதுபோலவே அந்தப்புடைவைவியாபாரியைக் கமக்காரன், "நீ என்ன சாதி"யென்று கேட்க வியாபாரிதான், "ஹரிஜனசாதி" யென்றது ஷை பலாமரத்தைக் கமுகந்தோட்டமரமென்றவாறு யிருக்குமல்லவா? அந்தப் புடைவைவியாபாரி சொன்ன மறுமொழியைச் சரியென்று தாபிக்கவே ஹரிஜனநேசன் கேசரியில் தோற்றினர். இவரது விதண்டவாதத்தைப் பள்ளிச்சிறுரும் படியாப் பெண்கள்தாமும் ஒப்புக்கொள்ளாரென அறிவாராக.

3ம் பந்தியில் "இந்தியாவில் ஹரிஜனவகுப்பில் நீதிபதி முதலாப் பெரும் பதவி பெற்று வாழ்கின்ற அவர்கள் தங்கள் சாதியினர்க்கு இப்பெயர் (ஹரிஜனர்) இட்டிருத்தலைக் கண்டித்திலர்" என்றும், "திண்டாதார் என்பதிலும் ஹரிஜனம் என்பது சிறந்த பெயர் என்பது அவர்கள் கருத்தப்போலும்" என்றும சோசியம் சொல்லுகிறார்—சமாதானம். அக்தோபாவம்! பலசாதிகளிலுமுள்ள ஏழைமக்கள் சமூகத்தினைக் கடவுள் பிள்ளைகள் (ஹரிஜனர்) என்று அவர்களுக்கு உதவி புரிபவர் சொன்னால் ஒரு சாதியிலுள்ள ஒரு நீதிபதி கமுகந்தோட்ட மரமென்றவாறுகத் தன்னைக் ஹரிஜனசாதியென்று ஏன எண்ணுகிறார். ஹரிஜனரென்பது சாதிப் பெயருமல்லவே. செல்வஞ் செல்வாக்கால் யாதொரு குறையுமின்றி உயர்பதவியிலிருக்கும் அந்த நீதிபதி இந்தியாவில் இருக்க ஹரிஜனநேசன் அவருக்குக் ஹரிஜனசாதியென்று பெயரிட்டது போல, இங்கேயும் அப்பெயரை ஒத்துக்கொள்ளாதாருக்கும் வைப்பாரோ அன்றி வைத்துவிட்டாரோவென அஞ்சவேண்டியிருக்கிறது.

4ம் பந்தி "தனிமையில் ஒருவரை ஒருவர் 'நீ என்ன சாதி' என்று கேட்டால் அவ்வச்சாதியைச் சொல்லலாமென்றும் கேட்பவரின் நோக்கத்திற்கும்இடத்திற்கும் சொல்பவரின நோக்கத்திற்கும் தக்கதாகச் சாதிப் பொதுப்பெயர்கூறவும் நேரிடுமென்கிறார் — சமாதானம — அந்த வியாபாரியும் கமக்காரனும் தனிமையில்நின்று சம்பாஷித்தமையை ஷை நேசன் பொதுவில் இழுத்து இடர்படுகின்றாரென்பதை அறிவாளிகள் அறிவா.

5ம் பந்தி 6000ம் மயிலுக்கப்பாலுள்ள ஐரோப்பா முதலிய தேசங்களில் ஓடிப்போய் நின்று பாஷைச் சாதியால் உதாரணப்படுத்துவது ஹரிஜனருக்கேயன்றி ஏனையோருக்காகாதென அறிவாராக.

6ம் பந்தி "சகல சராசரங்களும் கடவுள் பாதுகாப்பென்பதை உணராத அந்த அறிவில்லாக் காந்தி இட்ட பொதுப்பெயரைச் சொன்னபடியாலன்றோ இதனைச் சங்கடம் நேரலாயின" தென்கிறார் (சமாதானம) ஷை காந்தி சில சாதி ஏழைக்குழுவினருக்கிட்ட பொதுபெயரை ஒரு சாதியிலுள்ள வியாபாரி தன்னைக் ஹரிஜனசாதியென்று சொன்னமை சரியென்று தாபிக்கவே மிக அறிவிற் சிறந்த மேதாவியாகிய ஹரிஜனநேசன் கேசரியிலேறிக் கர்ச்சிக்கின்றார்.

7ம் பந்தியின் சமாதானம்—தீண்டாச் சாதியென்று ஒரு சாரரை இன்னொருசாரார் தங்கள் விருப்பப்படி சொல்லிவந்ததைச் சரியில்லையென்று அதற்குப் பதிலாகக்—ஹரிஜனமென்பது வண்ணார் தங்களை டோபியென்றும், நாவிதர் வாபரென்றும் சொல்லுதல்போலாகுமல்லவா. அன்றியும் பல பத்திரிகைகளில் சில

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

திருவையாறு — திருவிருத்தம்

திருத்திக் கருத்தினைச் செவ்வே
நிறுத்திச் செறுத்துடலை
வருத்திக் கமலமலர் வாளேடுத்
தோச்சி மருங்குசென்று
விருத்திக் குழக்கவல் லோர்கட்கு
விண்பட் டிகையிடுமால்
அருத்தித் தருந்தவ ரோத்துமை
யாற னடித்தலமே.

—அப்பர் சுவாமிகள்

## விதானையார் விசாரணைக்குத் தடை

### எதிரிக்கு 4 மாதக் கடுழியம்

[நமது நிருபர்]

சென்ற 20-1-37 புதன்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி திரு. வீ. எஸ். ஜெயவிக்கிரம முன்னிலையில் வட்டுக்கோட்டை உடையார் அம்பலவாணர் அராலி தெற்கு விதானையாராகிய கே. நடராசா சென்ற ஆடி மாதம் 31ம் திகதி வரையில் அவ்வூர்ச் சிதம்பரப்பிள்ளையின் மாமியாரின் அறிவித்தலின் பொருட்டு விசாரணைக்குச் சென்றபோது இவ் வெதிரியாகிய சிதம்பரப்பிள்ளை கடமை பார்க்க விடாது தடை செய்ததுமல்லாமல் ஓர் கொடுவாக் கத்தியாலும் கன்னத்திற் படுகாயப் படுத்தியதாகக் குற்றஞ் சாட்டிய வழக்கு எதிரிபக்க விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பாக நியாயதுரந்தார் திரு. ஆர். ஆர். நல்லையாவும் எதிரி சார்பாக திரு. ரீ. சி. இராசரத்தினமும் வாதித்தனர்.

எதிரியாகிய சிவகரதர் சிதம்பரப்பிள்ளை கூறிய சாட்சியத்தின் சாராம் சமாவது:-

இத் தினத்தன்று நான் எனது வீட்டிலில்லை. எனது தகப்பனார் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கிருந்து இரவு 7 மணியளவில் எனது வீட்டுக்கு வந்தபோது விதானையாரை வீட்டிற் கண்டேன். "நீர் ஏன் இங்கு வந்தீர்?" என்று கேட்டேன் எனக்கு விதானையார் அங்கு வருவது விருப்பமில்லை என்பதை முன் பல முறைகளில் அறிவித்திருந்தேன். விதானையார் எனது மாமியார் முதலியவர்களுடன் கதைத்து வீண் சச்சரவுகளை உண்டாக்க நினைத்ததை நான் அவதானிக்கக் கூடியதாயிருந்தது. எனக்கு விதானையார் 'நீ யாரடா கேட்கிறது' என்று சொல்லிக் கையிலிருந்த பிரம்பால் அடித்தார். அல்லாமலும் கழுத்திற் பிடித்துத் தள்ளினார். நான அவருக்கு அடித்தபின், எனது கையில் தடியில் கட்டிய சத்தகமிருக்கக்கண்டேன். இதன்பின் சனங்கள் அங்கு கூடினர். நான் பயத்தால் அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டேன். நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு 4 மாதக் கடுழிய மறியல் தீர்த்தார்.

## சைவசித்தாந்த மகாசமாஜம்

திரு. ந. சிவகுருநாதபிள்ளையவர்கள் தலைமைப் பேருரை

(முற்றொடர்)

### ௫. சைவத் தனிப்பெருங் கடவுள்.

சைவத்திற் கொள்ளப்படுங் கடவுள் சிவபெருமானே. சிவம் என்னும் சொல், வடமொழியில் மங்களம், ஒளி, எல்லாவற்றிலும் இருத்தல் என்பனவாதிய பொருளையும், தமிழ்மொழியில் செம்மை, சிவப்பு என்னும் பொருளையுந் தரும். சிவபெருமான் தீயும் சூடும் போலச் சிவமும் சத்தியுமாக விளங்குவர். சிவபெருமானுடைய சத்தி இச்சா சத்தி கிரியாசத்தி ஞானசத்தியென மூவிதமாய்த் திகழும். சிவபெருமான் தமது சத்தியைக் கொண்டே படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழிலையுஞ் செய்தருளுவர். சிவபெருமானே பரமபதி என்பது வேதம் உபநிடதம் புராணம் இதிகாசமுதலிய எல்லாக் கலைகளாலும் உணர்த்தப் பெறுகின்றது. இவ்வுண்மையைச் சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் இராமாயண தாற்பரிய சங்கிரகம், பாரத தாற்பரிய சங்கிரகம் என்னும் நூல்களால் அறியலாம். சிவபிரானைப் பிரமன், விண்டு, உருத்திரன் என்னும் மூவருள் ஒருவரான உருத்திரனென்று சிலர் மயங்குவர். "மூவரு முப்பத்து மூவருமற்றொழிந்த தேவருங்காணச் சிவபெருமான்" "மூவரு மறிகிலர் யாவர் மற்றறிவார்" என்பன முதலாகக் கூறப்படும் பிரமாண வாக்கியங்கள் அம் மயக்கத்தைத் தீர்க்கும் மருந்தாகும். அப்பையதீக்ஷிதர் அருளிச்செய்த சிவதத்துவ விவேகம் என்னும் நூலில் சிவபெருமானது பரத்துவநிலை வேதோபநிடத முதலிய பிரமாணங்கள் கொண்டு நன்கு விளக்கப்பெற்றிருக்கின்றது. சிவபெருமான் உலகிற்கு அதிதனாகவும், காரணனாகவும், உயிராகவும், உலகமாகவும் நிற்கும் இயல்பினை,

"உலகினை யிறந்து நின்ற
தானுரு வென்ப தோரார்
உலகவ னுருவிற் றோன்றி
யொடுங்கிடு மென்று மோரார்
உலகினுக் குயிரு மாகி
உலகமாய் நின்ற தோரார்
உலகினு ளொருவ னென்ப
உருவினை யுணரா ரெல்லாம்"

எனச் சிவஞான சித்தியார் எவ்வளவு அழகாக எடுத்து ரைக்கின்றது பாருங்கள். சிவபெருமான் பெருமை அளவிடற்கரியது.

"கற்புறு சிந்தை மாதர்
கணவனை யன்றி வேறோர்
இற்புறத் தவரை நாடார்
யாங்களு மின்ப வாழ்வும்
தற்பொறி யாக நல்குந்
தலைவனின் னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோம் கண்டாய்
பூரண வந்த வாழ்வே"

எனத் தாயுமான சுவாமிகள் கூறியருளிய திருவாக்கைச் சைவமக்கள் கடைப்பிடித் தொழுக வேண்டியது இன்றியமையாததாகும்.

### ௬. சைவ அடையாளங்களும் மந்திரமும்

சைவசமயிகள் அணிய வேண்டிய அடையாளங்களிற் சிறந்தவை இரண்டு. அவை திருநீறும், உருத்திராக்கமுமாம். இவ் வடையாளங்கள் உயரிய தத்துவ உண்மைகளை விளக்குவன திருநீறு சிவபெருமான் சங்கார காரணனாய் விளங்கும் உண்மையினையும், உருத்திராக்கம் அவனது பேரருளையும் விளக்குவனவாம். இன்னும் பலவுள. சைவத்தில் உயர்ந்ததாகக் கூறப்படும் மந்திரம் பஞ்சாக்ஷரம் அல்லது திருவைந்தெழுத்தென்று சொல்லப்படும். திருவைந்தெழுத்து முறையே சிவம், சத்தி, ஆன்மா, திரோதம், மலம் என்னும் ஐவகைப் பொருளைக் குறிப்பதாகும். இதன் பெருமையைத் தேவார முதலிய திருமுறைகளிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் பரக்கக் காணலாம்.

### ௭. சிவதீக்ஷை

தீக்ஷை என்னும் வடசொல் மலத்தைக் கெடுத்து, சிவத்துவத்தை விளக்குதல் என்னும் பொருளைத் தரும். சைவத்திற் கூறப்பட்ட தீக்ஷை முறை, வேறு எச்சமயத்திலுங் கூறப்படவில்லை, கிரியா சத்தியால் ஞானத்தை உதிக்கச் செய்வதற்குத் தக்க உபாயங்கள் தீக்ஷையில் விதிக்கப்பெற்றிருக்கின்றன. தீக்ஷை சமயம், விசேடம், நிருவாணம் என மூவகைப்படும். சைவசமயிகள் அனைவரும் சமய தீக்ஷையையாவது பெற்றுக் கொள்ள வேண்டும். பாலர்களும் விருத்தரும், பிணியாளரும், மாதரும், பல போகத்தவரும், பெற்றுக் கொள்ளுதற்குரிய எளிய தீக்ஷை முறைகளும் சைவ சமயத்தில் விதிக்கப்பெற்றிருக்கின்றன. ஏனைச் சமயிகள் எல்லாம் தத்தம் சமயத்தில் விதிக்கப்பெற்றுள்ள சமயப் பிரவேசக் கிரியைகளைக் கைக்கொண்டுவரவும், நமது சமயிகள்மட்டும் வேறு எச்சமயத்திலும் காணப்பெறாத அருமையுடைய தீக்ஷையைக் கைக் கொள்ளாதிருப்பது வருந்தத்தக்கதாகும்.

### ௮. சித்தாந்த முத்தி

சித்தாந்தத்திற் கொள்ளப்படும் முத்தி இருவகைப்படும். அவை பத முத்தி பரமுத்தி யென்பனவாம். தாசமார்க்க மாகிய சரியையினை அனுட்டிப்போர் சிவசாலோகத்தையும், சற்புத்திர மார்க்கமாகிய கிரியையினை அனுட்டிப்போர் சிவசாமீபத்தினையும்,

(தொ…

# இன்றைய திருவாங்கூர் சமஸ்தானம்

## வருஷத்தில் 16 கோடி ரூபாய்க்கு வியாபாரம்

## சீனமுறையிற் கட்டப்பட்ட பலகட்டடங்கள்

## மலையாளத்திலும் ஆங்கிலத்திலும் 120 பத்திரிகைகள் நடைபெறுகின்றன

(ஸேர். ஸி. பி. இராமசாமிஐயர், கே. ஸி. ஐ. இ. எழுதியது)

மேற்குத் தொடர்ச்சி மலைகளால் இந்தியாவின் மற்றப்பாகங்களிலிருந்து பிரிக்கப்பட்டும், மேற்குப் பக்கம் கடலால் சூழப்பட்டும், ஆகாய விமானங்களிற் செல்வோர் அறியக் கூடாதபடி சிறு குன்றுகளும், அடர்ந்த காடுகளும், தென்னந்தோப்புகளும் மறைத்தும் இருப்பதால் திருவாங்கூர் சமஸ்தானத்தின் இயற்கை வளனும், செயற்கை நலனும் உலகத்தை இதுவரை கவராது இருந்தன. இப்போது திருவாங்கூரின் புகழை மக்கள் உணரத்தலைப்பட்டார்கள். இந்தியாவின் பல மாகாணங்களிலிருந்தும் எண்ணிறந்த பெரியோர் தற்போது திருவாங்கூருக்குச் சென்று அதன் அழகைக் கண்டு திரும்புகிறார். விஸ்தீரணத்தில் திருவாங்கூரும் பரோடா சமஸ்தானமும் ஒன்று. ஆனால் திருவாங்கூரில் பரோடாவைப்போல் இரண்டு மடங்கு மக்கள் வசிக்கிறார்கள். காஷ்மீரம் அல்லது குவாலியர் சமஸ்தானங்களைவிட நூற்றுக்கு ஐம்பது விதம் மக்கள் அதிகமாகத் திருவாங்கூரில் இருக்கிறார்கள் இச்சமஸ்தானங்களின் வருமானங்கள் ஏறக்குறைய சமமாகவே யிருக்கின்றன. மைசூர் சமஸ்தானம், திருவாங்கூரை விட நூற்றுக்கு இருபத்தைந்து பங்கு ஜனத்தொகையையும் நூற்றுக்கு எற்பது பங்கு வருமானத்தையும் அதிகமாகக் கொண்டிருக்கிறது.

### குறைந்த வரி

இதிலிருந்து மற்ற இந்திய சமஸ்தானங்களை விடத் திருவாங்கூரில் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரி மிகக் குறைவென்று தெரிகிறது. 7700 மைல் விஸ்தீரணமுள்ள இச்சமஸ்தானத்தின் பாதிப் பாகம் அடர்ந்த காடுகளாலும் சதுப்பு நிலங்களாலும் மூடப்பட்டிருக்கிறது. மீதியுள்ள பாதிப்பாகத்திலேயே மக்கள் வசிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். அதனால் ஜனநெருக்கம் அதிகமாயிருக்கிறது.

### தொழில்கள்

திருவாங்கூர் மக்கள், அதிகாலந்தொடங்கி கைத்தொழிலில் விசேஷ மதிப்புக் கொண்டிருக்கிறார்கள். தொண்டைமான் முதல் தோட்டிவரை எல்லாரும் எளிய வாழ்வை நடத்துகிறார். உலகமே பெரிய நெருக்கடியில் சிக்குண்டிருக்கும் இக்காலத்திலும் திருவாங்கூர் விவசாயிகள் தேங்காய் வியாபாரத்தில் நல்ல இலாபத்தைப் பெறுகிறார்கள். மிளகு, சுக்கு, பாக்கு, பலாப்பழம் முதலியன இதர முக்கிய விளை பொருள்கள். இப்போது கருப்பு விளைவு நல்ல பலனைத்தரக்கூடுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. தேயிலை, றப்பர் உற்பத்தியில் இந்தியாவில் திருவாங்கூரே சிறந்த பாகமாகும். குடிசைத் தொழில்கள் பல அநேக நூற்றாண்டுகளாக நடந்து வருகின்றன. துணி நெசவு, கயிறு திரித்தல், மரத்தாலும் தந்தத்தாலும் சித்திரவேலைகள் செய்தல், தச்சுவேலை முதலிய சில குடிசைத் தொழில்கள் குறிக்கத்தக்கன. இவைகளின் வேலைப்பாடுகள் உலகத்திலேயே சிறந்த பெயரைப் பெற்றிருக்கின்றன. சில பெருங் கொடையாளரின் உதவியால் செம்படவர் சிலர் சில வருஷங்களுக்கு முன் 'லேஸ்' பின்னும் தொழிலை ஆரம்பித்தனர். இப்பொழுது அதன் அழகும், வேலைத்திறனும் புகழப்படுகின்றன. களிமண் போன்ற பிரதேசமண், பீங்கான் சாமான்கள் செய்யத் தகுதியானது. [illegible] சில வருஷங்களுக்குள் திருவாங்கூர் பீங்கான் சாமான்களிலும் புகழ்பெறும்.

### காடுகள்

திருவாங்கூர் காடுகளில் ஏராளமாகத் தேக்கு, செம்மரம், கருங்காலி, சந்தனக்கட்டை, ஏலம் முதலியவை கிடைக்கின்றன. தற்போதைய உலகத்துக்கு வேண்டிய அழகிய பட்டு, காகிதம், காகித அட்டைகள் முதலியன செய்தற்கு வேண்டிய மரக்கூழைத்தரும் மிருதுவான மரங்களும், நாணல்களும் ஏராளமாக இக்காடுகளில் வளர்கின்றன. காடுகள் மட்டும் திருவாங்கூரின் மூன்றில் ஒரு பங்கைமூடியிருக்கின்றன.

### போக்கு வரவு

கடலுக்கு அருகிலுள்ள சதுப்பு நிலங்களே திருவாங்கூருக்கும், கொச்சிக்கும் போக்கு வரவு சாதனமாக அமைந்திருக்கின்றன. ஆறுகள் படகுகள் போக வரச் சாத்தியமானவையாக அமைந்திருக்கின்றன. சாமான்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்வதில் றயிலை விட இம்மார்க்கங்களிலேயே குறைந்த செலவாகிறது. மோட்டார் படகுகள் ஏற்படில் திருவாங்கூரே மற்ற இந்திய சமஸ்தானங்களைவிட அதிகச் சிறப்புப் பெறும். இப்போதுள்ள திருவாங்கூர் வியாபாரம் நூற்றுக்கு 26 பங்கு கடல் மார்க்கமாயும், 45 பங்கு இச் சதுப்பு நிலங்கள் மூலமாகவும் நடக்கிறது

### கிராமப் புனருத்தாரணம்

வருஷத்தில் சுமார் 25 லட்ச ரூபாய் பெறுமானமுள்ள மீன் ஏற்றுமதியாகிறது. பன்றி, தேனீ முதலியன வளர்த்தலில் திருவாங்கூர் முதன்மை பெற்றிருக்கிறது. மார்த்தாண்டத்துக்கருகில் கிராமப் புனருத்தாரண வேலை நடைபெறுகிறது. அதனால் இவ்விடம் இந்தியாவின் முக்கிய பாகமாகும்.

### தொழிற்சாலைகள்

இதுவரை திருவாங்கூரின் இயற்கைப் பொருள்களைப்பற்றிக் கூறப்பட்டது; இனித் தொழிற்சாலைகளைப் பற்றி அறிய வேண்டுவது அவசியமாகும். காரீயம்; இரும்பு முதலிய தாதுப்பொருள்கள் ஏராளமாகக் கிடப்பினும் நிலக்கரியும், எண்ணெய்களும் சமஸ்தானத்தில் கிடைப்பதில்லை. இதுவே தொழிற்சாலைகளின் அபிவிருத்திக்குத் தடையாயிருக்கிறது. இதற்குப் பதிலாக இங்கு நீரின் உதவியால் மின்சாரம் வெகு சுலபமாகக் கிடைக்கிறது. பள்ளிவாசல் நீர் - மின்சாரத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சில மாதங்களில் இத்திட்டம் முடிவு பெறும். பின்னர் சாயவேலை, காகிதம், றப்பர், துணி, முதலிய தொழிற்சாலைகள் பல ஏற்படுதற்குப் போதிய சாதனங்கள் பல உண்டாகும்.

### அயலிய வியாபாரம்

கொச்சி துறைமுகத்திலும் திருவாங்கூர் சமஸ்தானத்துக்கு உரிமை உண்டு. அதனால் திருவாங்கூரின் வியாபாரம் விருத்தியாதற்கும் பல சௌகரியங்கள் இருக்கின்றன. இப்போதே திருவாங்கூரில் வருஷத்தில் பதினாறுகோடி ரூபாய் பெறுமான வியாபாரம் நடக்கிறது.

சுமார் இரண்டாயிரம் வருஷங்களாகத் திருவாங்கூர் அந்நியநாட்டு வியாபாரத்தில் பேர்பெற்றிருக்கிறது. பண்டை நாளில் சீனத்தோடு வியாபாரம் இருந்தது. திருவாங்கூரில்

தொடர்ச்சி 6ம் பக்கம்

## சைவசித்தாந்த மகா சமாஜம்

—0—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போகத்தை அனுட்டிப்போர் சிவசாரூபத்தையும் அடைவர். இம் மூன்றும் பதமுத்தி என்று சொல்லப்படும். இனிச் சிவஞானத்தை அனுட்டிப்போர் இறைவனுடைய எண் குணங்களும் தம் மாட்டுப் பதியப் பெற்றுச் சிவசொரூபமாய் விளங்கும் சிவசாயுச்சியப் பேற்றை யடைவர். இந்திரலோகம், பிரமலோகம், விண்டுலகம் என்று சொல்லப்படும் உலகங்களை யடைதல் முத்தியிலையென்று சொல்லத் தக்கதன்று; அவை சொர்க்கங்கள் என்று சொல்லப்படும். "தொங்கலா னடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே" என்னும் தேவாரத் திருவாக்கும் 'மாலயன் பெறுபதத்தையும் பொருளென மதியேன்" என்னும் கந்தபுராணத் திருவாக்கும் ஈண்டு சிந்திக்கத் தக்கன.

### ௬. வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்.

திருமூலநாயனார் திருமந்திரத்தில்,

"வேதமொ டாகமம்
மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவும்
சிறப்பு மென்றுள்ள
நாத னுரையிவை
நாடிலிரண் டந்தம்
பேதம தென்னிற்
பெரியோர்க் கபேதமே"

எனக் கூறியுள்ளார். இவ்வுண்மை கடைப்பிடிக்காத வைதிக சமயத்தார்கள் வேதத்தை மட்டும் கைக்கொண்டு சிவாகமங்களைக் கைக்கொள்ளாத காரணத்தால் வேதோபநிடதங்களிற் கூறப்படும் உண்மைகளைத் தெள்ளிதினுணர்ந்து கொள்ளக் கூடாதவர்களா யிருக்கின்றார்கள். அவர்களா லறியப்படாத உண்மைகள் சித்தாந்தத்தில் விளங்க உணரக்கப் பெற்றிருக்கின்றன. 'ஏகம் பிரமம்' என்னும் ஒரு வாக்கியம் உபநிடதத்திற்காணப்பெறுகின்றது. இவ்வாக்கியத்திற்கு வைதிகர்கள் 'பிரமப் பொருள் ஒன்றைத் தவிர, வேறு பொருள் இலை" யென்று ஏகான்மவாதஞ் சாதிப்பாராயினர். ஏகம்பிரமம் என்னும் வாக்கியத்தின் பொருள் அஃதன்று என்பதை நமது மெய்கண்டசிவம் சிவஞானபோதத்தில் "ஒன்றென்ற தொன்றே காண ஒன்றே பதி" அதாவது பிரமங்கள் பல இல்லை, பிரமம் ஒன்றேயுள்ளது என விளக்கியருளினர். இனி, 'ஏகமே வாத்வி தீயம் பிரமம்' 'சிவமத்வைதம் சாந்தம்' என்பனவாதிய வாக்கியங்களினுள்ள அத்வைதம் என்னும் சொல்லிலுள்ள அகரத்திற்கு இன்மைப் பொருள் கொண்டு ஏகம் பிரமம் என்ற பொருளிலேயே இதனையும் வழங்குவாராயினர். சிவஞான போதத்தில்,

"பண்ணையு மோசையும் போலப் பழமதுவும்
எண்ணுஞ் சுவையும் போலெங்குமாம் —அண்ணல்தாள்
அத்துவிதமாதல் அருமறைகளொன்றென்றது
அத்துவித மென்றறையு மாக்கு"

என, அதாவது பண்ணும் அதன் ஓசையும், பழமும் அதன் சுவையும் எங்ஙனம் பிரிக்கப்படாதகுணகுணிப் பொருள்களா யிருக்கின்றனவோ அவற்றைப் போல இறைவன் உலகுயிர்களை இயக்குதற் பொருட்டு அவற்றொடு பிரிக்கப்படாத நிலையிற் கலந்து நிற்றலே அத்வைத சம்பந்தமென்று விளக்கியிருக்கும் வாய்மை பாராட்டற்குரியதன்றோ? இது பற்றியே தாயுமான சுவாமிகள் 'பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித மெய்கண்ட நாதனருள் மேவுநாளெந்நாளோ" என மெய்கண்ட சிவத்தைப் போற்றுவாராயினர். மாதவச் சிவஞான யோகிகள் சிவஞானபோதச் சிற்றுரையிலும், சிவஞானமாபாடியத்திலும் அத்துவித உண்மை பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்து உண்மைப் பொருளை வெளியிட்டிருக்கின்றார்கள். அவற்றைச் சைவமக்களுணர்ந்து இன்புறுவாராக. இனிப் 'பிரமாகமம்' 'சிவோகம்' எனச் சீவர்கள் தம்மைப் பிரமமாக, சிவமாகப் பாவிக்க உபநிடதங்களில் விதிக்கப் பெற்றிருக்கின்றது. வைதிகர்கள் சீவர்களெல்லாம் பிரம சொரூபமே யாதலின் தான் பிரமம் என்பதை உணர்ந்து கொள்ளுவதற்காகவே இங்ஙனம் பாவிக்கும்படி விதிக்கப் பெற்றிருக்கின்றதென்று கூறுகின்றார்கள். பிரமம் தன்னையே தான் என்று பாவிப்பதனால் வரும் பயன் யாதுமில்லை. அல்லதூஉம் பாவனை என்னுஞ் சொற்குப் பொருளாமாறுமில்லை. இனி, இப் பாவனையின் விசேடத்தை:—

"கண்டவிவை யல்லேனு
னென்று காணுக்
கழிபாழு நானல்லே
னெனக் கருதிக் கசிந்த
தொண்டினொடு முளத்தவன்று
னின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத்
தோன்றுவன் வேறின்றி
விண்டகலு மலங்களெல்லாங்
கருட தியானத்தால்
விடமொழியு மதுபோல
விமலதையு மடையும்
பண்டைமறை களுமதுநா
னானே னென்று
பாவிக்கச் சொல்லுவதிப்
பாவகத்தைக் காணே"

எனச் சிவஞானசித்தியார்த்திருவிருத்தம் சிவோகம் பாவனையினுண்மையையும், பயனையும் எவ்வளவு தெளிவாக விளக்கியிருக்கின்றது காண்மின் அன்பர்களே.

—தொடரும்.

## விகடக்கோத்து

கணவன்:—நீ இம்மாதிரி ஓயாமல் பாடிக்கொண்டிருந்தால், ஒன்றில் நீயாவது வெளியே போகவேண்டும், அல்லது நானாவது வெளியே போகிறேன்.

மனைவி:—எப்படிச்செய்தாலும் என் பாட்டு அவ்வளவுதூரம் கேட்டே தீரும்.

கணவன்:—அப்படியானால், சிறைக்கு அனுப்பிவிடுவேன்.

மனைவி:—பறவாயில்லை, அங்கு "ரேடியோ" இருக்கிறது. பார்த்துக்கொள்ளுகிறேன்.

* * *

போசனசாலையில் உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கையில்

தகப்பன் (மகனைப்பார்த்து):—"தம்பி! இன்றைய பரீட்சையில் எப்படி எழுதினாய்?"

மகன்.—"அதைப்பற்றி இப்போது பேசவேண்டாம் அப்பா."

தகப்பன்:—"ஏன் பேசவேண்டாம்?"

மகன்:—"சாப்பிடுகையில் சந்தோஷகரமல்லாத விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டாமென்று அம்மாவிடம் நீங்கள் தானே சொன்னீர்கள்."

* * *

புருஷன் (பெண்சாதியைப்பார்த்து):- "வீட்டையேன் இப்படி அசுத்தமாய் வைக்கிறாய்? நீயொரு பன்றி" எனக் கோபித்துக்கொண்டார்.

பெண்சாதி:—"இதற்கேன் இப்படிக் கழுதைமாதிரிக் கத்துகிறீர்கள்?"

மகன்:—"அம்மா பன்றி, அப்பா கழுதை என்றால், நான்யார்?"

* * *

### தும்மட்டிக்காய்ப்பட்டர்

அம்மா:—தம்பி உனக்குக் கற்கண்டு கொடுக்கலாமென்று நினைத்தேன்; அலமாரிச் சாவியை எங்கேயோ காணோம்!

அம்பி:—சாவி இல்லாவிட்டால் பறவாயில்லை, அம்மா நான் விரலை விட்டுத் திறந்துவிடுவேன்!

அம்மா:—அதற்குத்தான்கேட்டேன்! அப்பா வரட்டும், உன் முதுகுத் தோலை உரிக்கச் சொல்லுகிறேன்.

* * *

வேலைக்காரன்:— "ஐயா, எஜமான்! வீட்டிற்கு வெளியே கன்னக்கொள்ளைக்காரர் வந்திருக்கிறார்கள்!"

எஜமான்:—"அடே மடையா! இன்றைக்கு எவ்வளவு பார்க்கமுடியாதென்று நான் உனக்கு முன்னமே சொல்லவில்லையா?"

## புடைவைவியாபாரியும் கமக்காரனும் ஹரிஜனநேசனும்

(1ம்பக்கத் தொடர்ச்சி)

இடத்தில் ஹரிஜனரென்றும், சில இடத்தில் தாழ்த்தப்பட்டவரென்றும், சில இடத்தில் தீண்டாதாரென்றும், எழுதிவருவதை இன்றைக்கும் படித்துவருகிறேனென்பதை அறிவாராக.

8ம் பந்தியில் "ஹரிஜனவகுப்பார் வைத்து நடத்தும் தொழிற்சாலைகள் பாடசாலைகள் சங்கங்கள் முதலிய ஸ்தாபனங்களுக்கு, எமது சாதிப் பொதுப்பெயராகிய ஹரிஜன தொழிற்சாலை முதலாம் பெயர்களை இட்டுப் பரிபாலித்து வருகின்றன" சென்கிறார்—சமாதானம் ஷெ பல ஸ்தாபனங்களை வைத்து நடத்தும் அவர்களுக்கு எவர் உதவியுந் தேவையில்லை. ஆகையால் அவர்களைக் ஹரிஜனரென்று சொல்லத் தேவையுமில்லை. இது ஹரிஜனநேசன் ஹரிஜனங்களுக்குக் கற்பிக்கும் மௌட்டீகம் ஏனையோருக்குங் கற்பிக்க இயலாதென அறிவாராக...... அன்றியும் ஹரிஜனரென்பது — கிறிஸ்தவர்—முகம்மதியர்—புத்தர்— ஆருகதர் முதலாம் மார்க்கப் பெயர்போன்றதேயன்றி ஓர் சாதிப் பெயராய் எப்படி வரக் கூடுமென்பதைக் ஹரிஜனர் நேசன் விளக்கிக் காட்டுவாராக.

9ம் பந்தியில்—ஹரிஜன மகான்கள் என்றநூலை வெளியிட்ட ஆசிரியர் திருவள்ளுவர் நந்தனர் பெற்றான் சாம்பான் முதலிய பெரியார்களையும் ஹரிஜன வகுப்பாரெனக் கருத்துடையாராயிருப்பாராயின் அவரது சிரசு சிதையுமென்று துணிவாகச் சொல்லுவேன். ஏனென்றால், சிவனடி பணிந்து தேமித்தெளிந்த சிவனடியார்களை விஷ்ணு அடியார் (ஹரிஜனர்) என்பது எவ்வாறுகும்—(ஹரி-விஷ்ணு) ஜனர்-கூட்டத்தினர். ஆகவே விஷ்ணுவழி செல்பவர் என அறிவாராக...... இன்னும் ஹரிஜனநேசனின் மனப்பான்மையிலுள்ள சாதிகளில் உள்ள கிறிஸ்தவர்களும் தம்மைக் ஹரிஜனர் என்று ஒப்புக்கொள்வாரோவென வினவுகின்றேன்.

கிறந, "குற்றமே தெரிவார் குறுமாமுனி சொற்பாவிலும் ஓர் குறை சொல்லுவார்" என்று எனக்கு மதிபுகட்டிய ஹரிஜனநேசன் நான் பொதுவாகச் சில மௌட்டீகர்களைக் கண்டிக்க எழுதிய சம்பாஷணையில் புகுந்து குற்றஞ் சொல்லி ஏன் இடர்ப்படுகிறாரெனக் கேட்கிறேன்......... இன்னும் ஹரிஜனமென்பது நமது சாதிப் பொதுப்பெயரென்று பல இடங்களிலுங் காட்டி மாரடித்துக் கடைசியில்தான் ஹரிஜனனல்ல என்பதைக் கையொப்ப மூலமாகக் ஹரிஜனநேசனென்று காட்டித் தப்பிக்கொண்டார்.

ஹரிஜனநேசனென்பது ஷெ சனங்களை நேசிப்பவர் என்பது கருத்து. இவர்கொண்ட நோக்கத்தையும் செயல்களையும் ஹரிஜனங்களே அறியட்டுக்கும்—இனிப் பெயரில்லையென்றும் கண்டிக்கிறார். இவர் தனது பெயரைச் சொல்லி வெளியில் வருவாராயின் நானும் எனது பெயருடன் இவ்விஷயத்தைக் கல்வி அறிவாளிகள் சபையொன்றைக் கூட்டி அச்சபையில் பேசித் தெளியத் தயாராய் இருக்கிறேனென்பதை அறிவாராக.

சிவவழிகொண்டோன்.


### தேவை

மானிப்பாய்க் கோவிற்பற்றில் இலவசமான மருத்துவ உதவி அளிப்பதற்குப் பயிற்சிபெற்ற ஒரு மருத்துவப்பெண் தேவை. வருடம் ஒன்றுக்கு 360 ரூபா சம்பளம் கொடுக்கப்படும். வருடந்தோறும் சம்பள உயர்வும் அளிக்கப்படும்.

வேண்டுவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு மனுப்பண்ணிக்கொள்ளுக.

தலைவர்,
கிராமச் சங்கம்,
மானிப்பாய்.

Mis. 242 25-1-37

## உதவிக்குச் சென்றவனுக்குக் கல்லெறியா உபகாரம்?

[நமது நிருபர்]

நவாலியில் வசிக்கும் (1) அந்தோனி அருள்தாசன் (2) அந்தோனி பாக்கியதாசன் (3) அந்தோனி தேவசகாயம் (4) கணபதி சடையன் ஆகியவர்கள் சென்ற 7-11-36 இரவு 10 மணியளவில் அவ்வூர் யோசேப் என்பவனுடைய வீட்டுக்கு 1 ம் எதிரி கல்லால் எறிந்ததாயும் 4 ம் எதிரி இச் செய்கைக்கு உடந்தையாயிருந்து மல்லாமல் நாகன் கந்தனுக்கும் தலையிற் காயம் வருவித்ததாயும் குற்றஞ் சாட்டிய வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நாகன் கந்தனது வாய்முறைப்பாட்டைக் கேட்டபின நீதிபதி 2 ம், 3 ம் எதிரிகளை இக் குற்றச் சாட்டிலிருந்து விலக்கி மற்றை இருவர்களையுமே குற்றஞ்சாட்டினர்.

நாகன் கந்தன் கூறிய சாட்சியமாவது:-

சென்ற கார்த்திகை மாதம் 7 ந் திகதி இரவு 10 மணியளவில் யோசேப்பின் வீட்டுக்கு யாரோ கல் எறிந்தனர். அவர்கள் சத்த மிட்டனர். நான் சத்தங்கேட்டு அங்கு ஓடினேன். அப்பொழுது 1ம் எதிரி கல்லால் எறியவும் 4 ம் எதிரி கல்லெடுத்துக் கொடுக்கவும் கண்டேன். 1 ம் எதிரியாகிய அருள்தாசனை 'ஏன் கல்லால் எறிகிறாய்? எங்களை நித்திரை செய்ய விடாமல் தொந்தரவு செய்கிறாய்?' என்று கேட்டேன். 4 ம் எதிரி, 'உவன்தான் எங்களுக்கு எதிராகப் பெட்டிசம் போட்டவன். உவனையும் எறிந்து முறி' என்று சொன்னான். அவன் (1 ம் எதிரி) எனக்கு எறிந்தான்; எறி என் தலையில் விழுந்தது. நான் நிலத்தில் விழுந்து விட்டேன். கைத்தான் என்னை வீட்டுக்குக் கொண்டு சென்றான். நான் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் இருந்தேன். மறு விசாரணைக்காக வழக்கை நீதிபதி வருகிற 17-2-37 க்குத் தவணையிட்டார்.

## சொந்தக்காரை வாடகைக்கு விட்டதாக வழக்கு

—0—

எதிரிக்கு 35 ரூபா

நமது நிருபர்

கச்சேரியடியில் வசிக்கும் டிரைவர் செல்லன்-இராசா என்பவன் அவ்வூர் K. தோமாசுப்பிள்ளையின் Q. 779-ம் இலக்கமுள்ள சொந்தக்காரை வாடகைக்கு விட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு 22-1-37 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். நீதிபதி வாடகைக்காரருக்குக் கட்டப்படவேண்டிய மிகுதி ரூபா 35 ஐயும் கட்டும்படி கூறி சாரதிக்கு 5 ரூபா அபராதம் விதித்தார்.

## தெருவில் சண்டையிட்டோர் உரிய தண்டனை பெற்றனர்

ஆறுமாத நன்னடத்தை

நமது நிருபர்

யாழ்ப்பாணம் கோட்டில் பொலிஸ் நீதிபதி வி. எஸ். ஜெயவிக்கிரம முன்னிலையில் நல்லூரைச் சேர்ந்த (1) சவுரி-சந்திரவேலன் (2) சவுரி-ஆறுமுகத்தான் தல்லாலையைச் சேர்ந்த (3) தம்பன்-கந்தையன் (4) தம்பன் மயிலன் ஆகிய நால்வரும் ஒருவரோடொருவர் பகிரங்க வீதியில் சண்டையிட்டதாகச் சார்சன் அம்சாவால் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரிகள், தாங்கள் செய்தது குற்றமென ஒப்புக் கொண்டனர். இவர்களில் ஒவ்வொருவர் மீதும் அநேக பழைய குற்றச்சாட்டுகள் எடுத்துக் காட்டப்பட்டன. நீதிபதி எதிரிகளைத் தனித்தனி 6 மாதம் 50 ரூபா நன்னடத்தையில் இருக்கும்படி தீர்ப்புக் கூறினார்.

## இன்னும் 18 மாசத்துள் அயிரோப்பாவில் யுத்தம் மூளுமாம்!

அகில கிறிஸ்துவ வாலிப சங்கப் பிரயாண காரியஸ்தராகிய டக்டர் T Z கூ என்பவர் இப்பொழுது கொழும்பில் நிற்கிறார்; அயிரோப்பிய தத்துவராச்சியங்களின் நிலைமையைப்பற்றி அவர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:—

"சாத்திரவண்ணம் தெய்விகமாக ஏதும் தடை நேர்ந்தாலொழிய, அயிரோப்பாக் கண்டத்திலே இன்னும் 18 மாசங்களுள் யுத்தம் மூளுமென்பது நிசமெனலாம். அயிரோப்பாக் கண்டத்திலே நான் கண்டு பேசியவர்களுள் எல்லாரும் யுத்தம் விரைவில் நேருமென்றும் ஜர்மனியே முதன் முதல் யுத்தத்தில் இறங்குவரென்றும் எனக்குச் சொன்னார்கள். வருகிற 1938-ம் ஆண்டுதான் போர் மூளுதற்கான காலமென்று சிலர் சொன்னார்கள்; இன்னும் சிலர் யுத்தம் எப்பொழுது உண்டாகுமென்று திடமாகச் சொல்லமுடியாது. ஆனால் எந்த நேரமும் உண்டாகுமென்று காத்திருக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஜெர்மனியர் யுத்தந்தொடங்கினால் 6 மாசகாலத்தில் பகைவரை வெல்லத் தவறுவர்களேல் ஜர்மனியர் 1918-ம் ஆண்டில் அடைந்தநிலைக் காட்டிலும் மோசமானகதியடைவர். படைவலி மாத்திரம் போதியதாகுமென்பது இத்தலியர் ஜெர்மனியரின் கொள்கை. அவர்கள் அப்படி நினைப்பது தவறு. படைவலியளவிற்கு பணமும் உணவுப் பொருள்களும் யுத்தத்திற்கு இன்றியமையாதன. இப்பொழுதுள்ள தத்துவராச்சியங்களும் ஜெர்மனியரும் இத்தலியருமே பணத்திலும் உணவுப் பொருள் விஷயத்திலும் பெரிதும் முட்டுப்பட்டவர். ஆனதனாற்றான், அவர்கள் தொடங்கும் யுத்தம் 6மாச காலத்திற்கு மேல் நீடிக்குமானால் அவ்விரு சாதியாரும் தோல்வியுற்று மாழ்குவரென்றேன். அல்லாமலும் ஜர்மனியருக்கும் இத்தலியருக்கும் ஜப்பானியரைத் தவிர உலகத்திலே வேறுபடைத்துணையில்லையெனலாம். ஆனதால் அயிரோப்பாவிலே சண்டையை மூட்டி விட்டால் அவ்விருசாதியாருக்குமே அநர்த்தம் ஏற்படக்கூடும். இத்தலியர் ஜர்மனியரைத் தவிர ஏனைய தத்துவ ராச்சியத்தின ரெல்லாரும் சமாதானத்தையே விரும்புபவர்; இப்படியிருத்தலால் ஜர்மனியர் இப்பொழுதே தங்கள் மேலதிகமான சேனைப்படைகளை அகற்றிவிட்டு மட்டுப்படுத்திக்கொண்டு ஏனைய இராச்சியங்களுடன் சிநேகபான்மையாக நடந்துகொள்ளத் தலைப்படுவரேல் அயிரோப்பாக்கண்டத்திலுள்ள எந்த இராச்சியமும் பேரானந்தங்கொண்டு ஜர்மனியருடன் சேர்ந்துகொள்வர்; ஆனால் ஹிட்லர் அதிகாரத்துடன் இருக்கிற வரையில் இது நடக்கப்போவதில்லை. ஹிட்லர் படைவலிமையிலேயே பெரிதும் நம்பிக்கையுள்ளவர்; ஆனதால் ஹிட்லர் காலத்தில் அயிரோப்பாவிலே சமாதானம் வரப்போவதில்லை.

ஜப்பானைப்பற்றிச் சொல்லுமிடத்தில் ஆசியாக்கண்டத்தினருக்குத் தலைமை வகிக்கக்கூடிய ஒரு தக்க வசதியை ஜப்பானரசு தவறவிட்டுவிட்டது. ஆசியாக்கண்டத்துள்ள இராச்சியங்களுடன் சிநேக முறையில் ஜப்பான் நடந்திருந்தால் ஜப்பான் இப்பொழுது மிக்க செல்வஞ் செல்வாக்கு அதிகாரம் என்னுமிவைகளுடன் இருத்தல் கூடும். கிழக்குத் தேசங்களிற் சமாதானத்தை ஜப்பான் நிர்வகித்தல் கூடும். ஆனால் ஜப்பான் இப்படிச் செய்தலை விடுத்து ஜர்மனியோடு சேர்ந்துகொண்டது. ஜப்பானை ஜர்மனி எந்த ஆபத்திலே கொண்டு போய் இறக்குமோ நாம் அறியேம். இனி, சீனர்களாகிய எங்களுக்கு ஜப்பானியருடன் எவ்வகையான குரோதமுமில்லை; நாங்கள் இன்றைக்கும் அவர்களுடன் சமாதானத்தைப் பெற விரும்புகிறோம். ஆனால், ஜப்பான் தனது அக்கிரமச் செயல்களால் எங்களைத் தன்னுடன் சமருக்கு இழுக்கின்றது."

## சுப்பிறீம்கோடு

பிப்ருவரி மீ 16-ந் தேதி ஆரம்பம்

வரும் பிப்ருவரி மாதம் 16-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டு ஆரம்பமாகும்.

## பரோபகாரிகள் மீதும் காடையர்பலாத்காரமா?

சுளிபுரத்தில் நடந்த காடையர் சேட்டை

நமது நிருபர்

சுளிபுரத்தைச் சேர்ந்த ஐக்கிய நாணய சங்க உபதலைவரும் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவரும் ஆகிய சரவணமுத்து தம்பு என்பவர் அவ்வூர் (1) வேலன்-பழனி (2) கோவிந்தன்-வயித்தியன் ஆகியவர்கள் சென்ற 20-ம் திகதி 3 30 மணியளவில் சந்தித்தபோது தோளால் இடித்துமல்லாமல் கத்தி முதலிய அபாயகரமான ஆயுதங்களையும் கொண்டு துரத்திப் பயமுறுத்தியதாகக் குற்றஞ் சாட்டிச் சென்ற 22-1-37 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் ஒரு வழக்குத் தொடர்ந்தார்.

சரவணமுத்து—தம்புகூறியதாவது:

சென்ற 20-1-37 பிற்பகல் 3-30 மணியளவில் நான் ஒழுங்கையாற் போனேன். அப்போது எதிரிகள் எனக்கு எதிர்ப்பக்கமாக வந்தார்கள். என்னைக் கிட்டியதும் என்னை உரோஞ்சிக் கொண்டு சென்றனர். சிறிது தூரம் சென்று மீளவும் கையில் ஆயுதங்களுடன் வந்து என்னைத் துரத்தினர். யான் பயமிகுதியால் பாதும் பேசாது வீடு சென்று விட்டேன். 21-1-37ல் இவ்வெதிரிகள் எனது வீட்டு வாசலில் வந்து நின்று தூஷணமாக ஏசினர். அக்கிராமத்தில் வசிக்க எனக்குப் பயமாக இருக்கிறது. எதிரிகளின் பெயர்களை ஏசண்டருக்கு மாதந்தோறும் அனுப்பும் எனது அட்டவணையில் எழுதி அனுப்பி இருக்கிறேன். நான் அக்கிராமத்திலிருக்கும் காடையர்களையும் கள்ளரையும் அறிவிப்பது எனது உத்தியோகக் கடமையிலொன்று. நூறு ரூபாவில் பதியப்பெற்ற பிணையில் எதிரிகட்கு விருந்துவிட்டு வழக்கை மறுவிசாரணைக்காக மல்லாகம் கோட்டிற்கு வருகிற 21-1-37க்குத் தவணையிட்டார்.

## கஞ்சா வைத்திருந்தோருக்கு 30 ரூபா

நமது நிருபர்

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் மதுப்பரிசோதகர் இராஜேந்திரம கொக்குவில் மேற்கில் வசிக்கும் வேலாயுதர் மாணிக்கம் அல்லது ஐயாத்துரை என்பவர் 35 கிறேயின் கஞ்சாவைச் சட்டவிரோதமாக வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டிய வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். நீதிபதி 30 ரூபா அபராதம் விதித்தார்.

### தேவை

அராலி தெற்கு சரஸ்வதி வித்தியாசாலைக்குத் தமிழில் தராதரப்பத்திரம் பெற்றவரும் தலைமை ஆசிரியர் பதவியை ஏற்று நடத்தும் திறமையுள்ளவரும், ஆங்கிலத்திலும் சித்திரத்திலும் தேக அப்பியாசம் பயிற்றும் முறைகளிலும் பயிற்சியுள்ளவருமாகிய ஓர் உபாத்தியாயர் தேவை. நிகழும் ஜனவரி மாதம் 31-ந் தேதிவரை விண்ணப்பப்பத்திரங்கள் மனேச்சரால் ஏற்கப் பெறும்.

Mis. 243. 25 & 28-1-37

## 500 ரூபாவைப் பறித்துக் கொண்டோடியதாக வழக்கு

விக்ரோரியாக் கல்லூரி மாணவன் கூறிய சாக்ஷியம்

மேல் விசாரணை 26-1-37க்குத் தவணை யிடப்பட்டது

(நமது நிருபர்)

சென்ற 23-1-37 சனிக்கிழமை யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் நீதிபதி திரு. சி. குமாரசாமி முன்னிலையில் சங்கானையைச் சேர்ந்த கே. சுப்பிரமணியத்திடமிருந்து சென்ற ஆவணி 14 ம் திகதி (நல்லூர்க் கந்தசுவாமி கோவில் சப்பரத் திருவிழாவிலன்று) இரவு அவ்வூர் பி. சி. ஐயாத்துரை (2) சுப்பிரமணியம் (3) செல்லத்துரை வேறு சிலருமாகக் கிட்டத்தட்ட 500 ரூபா வரையில் பறித்துக் கொண்டு ஓடி விட்டதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

1 ம், 2 ம் எதிரிகட்காக திரு. எச். ஆர். அரியகுட்டியின் அனுசரணையைக் கொண்டு நியாயவாதி திரு. எவ். எக்ஸ். பிலிப்பும் 3 ம் எதிரிக்காகத் திரு. செல்வத்துரையும் வாதித்தனர்.

கணபதிப்பிள்ளை சுப்பிரமணியமாகிய விக்டோரியாக் கலீஜ்ஜில் மற்றிக்குலேசன் வகுப்பிற் கற்ற மாணவன் ஆங்கிலத்திலே சாட்சியம் சொல்ல மறுத்துப் பின்பு சொல்லியதாவது:-

எனக்கு ஒரு மூத்த சகோதரர் இருக்கிறார். அவர் பெயர் தம்பிப்பிள்ளை. அவர் எனக்குக்காசு அனுப்பும் வழக்கமுண்டு. சென்ற 14 ம் திகதி ஆவணிமாதம் என்பேருக்கு 601 ரூபாவுக்கு ஓர் உண்டியல் வந்தது. அத்தினந்து நான் பாடசாலைக்குப் போய் விட்டு மத்தியானம் வீட்டிற் சாப்பிட்டு விட்டுத் திரும்பிப் பாடசாலைக்குப் போகும்போது அவ் வுண்டியலையும் கொண்டு சென்றேன். திரும்ப, நாலு மணியளவில், அங்கிருந்து புறப்பட்டு, செ. வ. பி. விலாசமிடப் பட்ட புடைவைக் கடைக்கு உண்டியலை மாற்றச் சென்றேன். அங்கு மாற்ற முடியாமையால், கந்தையாச் செட்டி கடையில் சென்று மாற்றிக் கொண்டு திரும்பவும் செ. வ. பி. கடைக்குச் சென்று ரூபா 9 சதம் 85 பெறுமதியான துணிகளை வாங்கிக் கொண்டு இராச் சாப்பாடு சாப்பிட்டேன். இதன் பிற்பாடு, மார்க்கட்டுக்குட் சென்று, சில பழங்களை வாங்கிக் கொண்டு வீடு செல்வதற்குப் பஸ்காலைக்குச் சென்றேன். அந்த நேரத்தில், அங்கு பஸ் அகப்படவில்லை. வேறு ஒரு பஸ்காரருடன் பஸ்கூலிக் காசைப் பற்றி வாக்குவாதப் பட்டுக்கொண்டு நிற்கையில், எதிரிகளுள் முதலாம் எதிரி, காரை ஓட்டிக்கொண்டு அங்கு வந்தார். என்னைக் கண்டதும் 1 ம் எதிரி 'ஏன் நிற்கிறாய்?' என்று கேட்டு விட்டு, என்னை அழைத்துப்போவதாகச் சொன்னார். ஆனால், பெற்றோலுக்கு 2 ரூபா கேட்டார். நான் கொடுக்கச் சம்மதித்தேன். நான் முன் காரிலும் அவர்கள் பின் காரிலுமாக ஏறிச் சென்றோம். இடை வழியில் வடக்கம்பாய் அம்மன் கோவிலடியில் கார் நிறுத்தப்பட்டது அங்கே ஏதோ ஒரு திருவிழா நடந்தது. இவர்கள் தாங்கள் உள்ளே சென்று பார்த்து விட்டு வருவதாகப் பகர்ந்து சென்றனர். நான் காரைவிட்டு இறங்கிக் காருக்கருகில் நின்றேன். இவர்கள் கோவிலுக்குச் சென்றதும், விசாகப்பெருமாள் என்னைச் சந்தித்தார். நாங்கள் இருவரும் கதைத்தோம். அப்போது விசாகப் பெருமாளும் என்னுடன் வீட்டுக்கு வருவதாகச் சொல்லி என்னுடன் நின்று விட்டார். இவர்கள் கோவிலிலிருந்து திரும்பி வந்ததும், 1 ம் எதிரி என்னிடம் நான்

வாக்குப் பண்ணிய காசு 2 ரூபாவையும் கேட்டார். நான் முடிச்சை அவிழ்த்து 2 ரூபாவை எடுத்துக் கொடுத்தேன். நாங்கள் எல்லோரும் திரும்ப விசாகப் பெருமாளுடன் காரிலேறிச் சித்தங்கேணிச் சந்திக்குச் சென்றோம். அப்போது நான் மறுத்தேன். 1 ம் எதிரி பெற்றோல் வாங்கப் போவதாகச் சொன்னார். அங்கு பெற்றோல் வாங்கினதும், கார் மீண்டும் சங்கானைக்குச் சென்றது. நான் தடுத்தேன். 1 ம் எதிரி மற்றவர்களை அங்கு விட்டு விட்டு வருவதாகச் சொன்னார். சங்கானைச் சந்தைக்குக் கிட்டக் கார் மறிக்கப் பட்டது. 1 ம் எதிரி என்னிடமிருந்து இன்னுமொரு ரூபா கேட்டார். நான் ஆக 2 ரூபாதானே தருவதாக ஒப்புக் கொண்டேன் எனச் சொன்னேன். அவர் கட்டாயம் தேவை எனப் புகன்றார்.

அப்போது நான் எனது முடிச்சை அவிழ்த்தேன். இப்படி அவிழ்த்து 1 ரூபாவை எடுக்கு முன், 1 முதலாம் எதிரி நான் வைத்திருந்த முழுக்காசையும் (நோட்டுகள்) பறித்து 2 ம் எதிரியிடம் கொடுக்க அவர் கொண்டு ஓடி விட்டார். இவரைத் தொடர்ந்து மற்றவர் இருவரும் ஓடினர். நான் அழுதேன். உடனே 1 ம் எதிரி தான் வாங்கித் தருவதாகச் சொன்னார். இப்படிச் சொல்லிப் பக்கத்தே இருந்த ஓர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அங்கே 3 ம் 4 ம் எதிரிகள் நின்றார்களே யல்லாமல், 2 ம் எதிரி அங்கு இல்லை. 1 ம் எதிரி 2 ம் எதிரியை அங்கு காணவில்லை எனச் சொல்லிவிட்டு அவரைத் தேடத் தொடங்கினார். நானும் விசாகப் பெருமாளுமாகக் காரடியில் நின்றோம். 2 ம் எதிரியைக் காணாது முதலாம் எதிரி தான் ஏதாவது நகை ஒன்றை அடைவு வைத்தாயினும் இக்காசை எடுத்துத் தருவதாகச் சொன்னார். மறுநாட்காலை, நாங்கள் கந்தர்மடத்தடிக்கு வந்தோம். அங்கு ஓர் சந்தியிற் கார் நிறுத்தப்பட்டது. முதலாம் எதிரி தனது மனைவியுடைய நகை ஒன்றைக் கொண்டு வருவதாகச் சொல்லிச் சென்றான். அவ கோயிலுக்குத் தேருக்குப் போய் விட்டதாகத் திரும்பி வந்து சொன்னார். அல்லாமலும், அடுத்தநாள் தீர்த்த உற்சவமாய் இருப்பதால் இதன் பின்பு காசை ஒழுங்குசெய்து தருவதாகச் சொன்னார்.

இரண்டாம்நாள் இரவு நானும் விசாகப் பெருமாளுமாக வீடு சென்றோம். 1 ம் எதிரியின் சொந்தக்காரக் குலசேகரத்திடம் இவற்றைச் சொன்னோம். அவர் மறுநாட்காலை காசை வாங்கித் தருவதாகச் சொன்னார். மறுநாள் 16 ம் திகதி குலசேகரமும் நாங்களுமாக 1 ம் எதிரியைத் தேடினோம். காணாது பொலிசாருக்கு இத் தகவலை அறிவித்தோம். பொலிசார் மணியகாரனுக்குத் தந்தியடித்தனர்.

நான் வீட்டு[illegible] திரும்புகையில் சங்கானை வி[illegible]யாரைச் சந்தித்தேன். அவரு[illegible]ங்களுடன் சங்கானைக்கு வந்து ம[illegible]காரன் வீட்டுக்குச் சென்றோம். [illegible]ங்கு ஓர் முறைப்பாட்டைக் கொடுத்தோம். அடுத்தநாள் 17 ம் திகதி, மல்லாகம் கோட்டில் வழக்குத் தொடுத்தோம்.

இதன்பின், மற்றைய சாட்சிகளை விசாரணை செய்தபின், வழக்கு மறு விசாரணைக்காக வருகிற 26-1-37 திகதிக்குத் [illegible]

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையக முந்துயர்தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுஹு
தை மீ கஉ௨ திங்கட்கிழமை

## கல்வியிற் சிறந்த யாழ்ப்பாணப் பெரியோர் - II

வடமொழியிலுந்தென்மொழியிலும் வல்லுநராய் யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் தம்புகழை நாட்டியவர்களுள் விசேஷமாக எடுத்துக்காட்டத்தக்கவர்கள் நீர்வேலி ஸ்ரீமத் சங்கரபண்டிதர், திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரித் தலைமைப்பண்டிதராய் விளங்கிய (புலோலி) பண்டிதர் வ. கணபதிப்பிள்ளையவர்கள், (காசிவாசி) பிரமஸ்ரீ செந்திநாதஐயர் முதலியோராவர்கள். இன்னும் புலோலிப் பசுபதீசுவரர் கோவில் ஆசாரியராகவிருந்த மாப்பிள்ளைக் குருக்களென வழங்கிய பிரமஸ்ரீ இராமலிங்கக் குருக்கள், வடலியடைப்பு பிரமஸ்ரீ அருணசல சாஸ்திரிகள் வேதாகம பண்டிதர்களாய் விளங்கினர். புலோலி பிரமஸ்ரீ ம. முத்துச்சுவாமிக்குருக்கள் வடமொழி தென்மொழி வல்லுனராய் வாழ்ந்தவர். மேலே சொல்லப்பட்ட சங்கரபண்டிதரவர்களின் குமாரர் திரு. சிவப்பிரகாசபண்டிதர் ஆரியமுஞ்செந்தமிழும் வல்லுநராகத் தமது தந்தையாரைப் பின்பற்றி இரு முதுமொழிகள் பொருட்டும் பெரிதும் உழைத்தவராவர். இப்படியான பெரியோருள் எமது ஞாபகத்தில் இப்பொழுது அகப்படாதோர் நாமங்களை, அபிமானிகள் ஞாபகத்திலிருந்தால் இங்கே பெய்து வாசித்துக்கொள்க.

இனி, யாழ்ப்பாணத்தைச் சன்மநாடாகவுடையவராய் ஆங்கிலமொழியில் வல்லுநராய் இங்கும் இந்தியாவிலும் ஏனைய தாரித்த நாடுகளிலும் உழைத்துப் பெரும்புகழையீட்டிய சில பெரியாரையிட்டு ஆராய்வோம். சென்னைச் சர்வகலாசங்கத்தார் முதன்முதல் பீ. ஏ. வகுப்புப் பரீட்சை நடத்தியபோது, இந்தியாவிலிருந்தார் பலரும் யாழ்ப்பாண மாணவர் சிலரும் அப்பரீட்சையிற் பிரவேசித்தனம். அவர்களுள் யாழ்ப்பாணவர்களாகிய திரு ஹரல்ட் விசுவநாதபிள்ளை, ராய்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையென்னும் இருவருமே சித்தியடைந்தனரெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களிருவரும் ஆங்கிலத்தில் மாத்திரமன்றித் தமிழ்மொழியிலும் அதிக திறமையுடையவர்கள், ஸ்ரீமத் தாமோதரம்பிள்ளையவர்கள் ஏட்டுப் பிரதியாகக்கிடந்த சில அரிய தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை நன்கு பரிசோதித்துச் சுத்தமான பதிப்பாக அச்சிட்டுப் பிரசுரித்தவர். தென்னிந்தியாவிலே ஆசிரியராகவும் வித்தியாதரிசியாகவுமிருந்த ஆ[illegible]விஸ்உவில்லியம் பிள்ளை [illegible]யென்பவர் ஆங்கிலமொழியில் [illegible] திறமையுண்ட யாழ்ப்பா[illegible] மகனுவர். சென்னைப் பச்சை[illegible]யப்பன் கலாசாலைக் கணித[illegible]ரியராகவும் தலைமையாசிரியராகவும் கடமைபார்த்த திரு க. சின்னத்தம்பிப்பிள்ளை யென்பவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புலோலியைச் சங்மநூராகவுடையவர். [illegible]ராசிரியர் ஜேம்ஸ் முத்தைய[illegible]ன்ஸ்முதலவர்கள் இவர்கள் இன்னும் ஸேர் முத்துக்குமாரசுவாமி இப்பெரியாரின் மருகர்களாகிய ஸேர். பொன். இராமநாதன், ஸேர். பொன். அருணசலம் என்னுமிவர்கள் ஆங்கிலம் தமிழ் என்னுமிருமொழிகளிலும் சிறந்தோராய், அரசியன் ஞானிகளாய், இங்கிலாந்துவரையில் தம் கீர்த்தி செல்லப்பெற்றவராய் இந்நாட்டின் ஈடேற்றத்தின் பொருட்டுப் பல்லாற்றானும் உழைத்த உத்தமராவர். இன்னும் இலை மறை காய் போலவும் நீறுபூத்த நெருப்புப்போலவும் பல அறிஞர்கள் யாழ்ப்பாணத்திலே தோன்றி நிலவி மறைந்திருக்கின்றனர். அவர்களை இங்கு அறியாமை காரணமாகவும் மறதி காரணமாகவும் எடுத்துக்காட்டாமை எம்மேற் குற்றமாகுமன்றி அப் பெரியாருக்கு அதனல் வரும் இழுக்கு யாதுமில்லையாம்.

இப்படியான மகத்துவங்களோடுகூடிய பெரியோர்களைப் பெற்ற யாழ்ப்பாணநங்கை இப்பொழுது அங்ஙனம் பெருதமைக்குக் காரணம் யாதென்பதே பெரிதும் ஆராயத்தக்கது. இலங்கை அரசினர் எங்கள் பிள்ளைகட்கு ஊட்டத் தலைப்பட்ட தமிழ்க்கல்வி மிகவும் மட்டானதென்பதும் தமிழ்மரபிற்கு விரோதமானதென்பதும் அறிஞர்கள் அறிந்தவிஷயம். தமிழும் ஆங்கில உயர்தரக் கல்வியும் கெட்டமைக்குக் காரணம் சென்னை கற்கத்தா முதலாம் இந்திய சர்வகலாசங்கப் பரீட்சைகட்கும் யாழ்ப்பாணத்தவர்க்குமிடையில், சென்ற 32 வருடகாலமாக, அதாவது லார்ட்கேர்ஸன் இந்திய பிரதிகாவலராகவிருந்து இலங்கை—இந்திய கல்வித்தொடர்பைத் தடுத்துவிட்ட காலந்தொடக்கம்எவ்வகையான தொடர்பும் இல்லாமற் போனமையேயாகும். வடமொழி விருத்தியாகாமைக்குக் காரணம் பிரதானமாக இங்குள்ள பிராமணர் அதனை அலட்சியஞ் செய்தமையேயாகும். யாழ்ப்பாணத்திலே இப்பொழுது இருக்கும் கல்விமுறையை உத்தேசிக்குமிடத்து, பழைய கல்விமான்களை யொத்தவர் ஒருவரேனும் இந்நாட்டில் இனி உதிப்பரோவென்பது சந்தேகத்திற்கிடமாம்.

*

## தாரகை ஆசிரியரின் குறுகிய நோக்கு

சென்ற வெள்ளிக்கிழமை யன்று வெளியான உதய தாரகை ஆங்கிலப் பிரசுரத்தில் அதன் ஆசிரியர் ஒரு நூதன விவாதம் ஒன்றைக் கிளப்பி யிருக்கிறர். அண்மையில் திருவாங்கூர் மகாராஜாவும் அவரது அறிவின் மேம்பட்ட திவானும் வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் அங்குள்ள தேவாலயங்களில் சாதி வித்தியாசமின்றி ஆசார சீலராயுள்ள இந்துக்களனைவரும் பிரவேசித்துக் கடவுளை வழிபடலாம் என்ற நியதி ஏற்படலாயிற்று. பல நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக, இந்துக்களிடையே பொதுவாக இழிந்த தொழில்களைச் செய்வோரும், ஆசாரமும், தூய்மையும் இல்லாதவருமாகிய சில குலத்தவர் ஆலயங்களிற் பிரவேசியாமலும் பிரவேசிக்க அநுமதிக்கப்படாமலும் இருந்துவந்த வழக்கம் உண்டு என்பதை எவரும் அறிவர். ஆதியில் வருணச்சிரம தர்மம் மிக மேலான நன்னோக்கத்தோடேயே ஆரம்பிக்கப்படலாயிற்று என்பதை நமது பெரியோர் மாத்திரமன்று உலகத்திற் பல்வேறு சாதி சமயங்களைச் சேர்ந்த அறிஞரும் ஒத்துக்கொள்ளத் தக்கதாகவிருக்கின்றது. ஆயின், காலநிதத்தில், மேலான நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட பல காரியங்கள் தமது ஆரம்ப நோக்கத்தையிழந்து திரிந்து சில காலங்களில் தீமை விளைக்கக்கூடியனவாகவும் சேர்ந்து வருவதுபோல, நம் பெரியோரால் ஆரம்பிக்கப்பட்ட வருணச்சிரமதர்மமும் காலக்கிரமத்தில் தனது உன்னத நோக்கத்தை ஓரளவிற்கு இழந்துவிட்டது என்பதை உணர்ந்தே காந்தியடிகள் போன்ற பெரியோர் அதன் உக்கிரத்தை அகற்றிப் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்" என்னும் வள்ளுவப் பெருந்தகையாரது கொள்கையை யொட்டித் தீண்டத்தகாதோர் முதலியவர்களை முன்னேற்றமடையச் செய்வதற்காக அரும்பாடுபட்டுழைத்து வரலாயினர். இப்பெரியாரது அருஞ் செயலாலும் ஏனையோர் நன்முயற்சியாலும் நிலைமை முன்னேற்றமடைந்து கொண்டே வந்தது. அணமையில் திருவாங்கூரில் நடந்த சம்பவம் இதன் பலனகவே நடைபெறலாயிற்று என்றே கூறக்கிடக்கின்றது.

நிலைமை இங்ஙனமாக, திண்ணைக்குத் தேன்கொட்ட மிடாவுக்கு நெறிகட்டியது போல, இந்து சமூகத்தில் ஏற்பட்டுள்ள இச் சீர்திருத்தம் கிறிஸ்து சமயத்தினலும் கிறிஸ்துவின் போதனையாலுமே ஏற்பட்டுள்ளதென உதயதாரகை ஆசிரியர் கிறிஸ்தவராகிய தங்கள் தலையிலேயே அதைத் தூக்கிப் போட்டுக்கொண்டு ஓரளவிற்குக் காந்தியடிகளையும் இந்து சமயப் பெரியோர்களையும் இந்துசமயக் கொள்கையையும் குறைத்துக் கூறத் தலைப்படுகின்றர். இந்துசமயக் கொள்கையையும் இந்து சமயப் பெரியோர்களையும் பற்றி நமது உ. தா. ஆசிரியர் கொண்டுள்ள அற்ப அறிவுதான இருந்தவாறென்னே! திருவள்ளுவர் இருந்த காலம் எது? "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்று கூறிப்போந்த வள்ளுவப் பெருந்தகையார் கிறிஸ்துவின் போதனைகளைக் கேட்டுத்தான கூறினரோ? காக்கடிப்பாக வாய்ப்பறையறைந்து அக்காலத்திருந்த சில பிராமணர்களைக் கண்டித்துப் "பிறப்பு எல்லா உயிர்க்கும் ஒப்பானது என்பதை நீவிர் உணர்வீராக" என்று போராடிய கபிலர் கிறிஸ்துவாலதான தூண்டப்பெற்றரோ? நீக்கவேண்டிய சில அசுத்தங்களிலிருந்து நீங்கி இறைவழிபாட்டில் திளைத்துநின்ற காலை எச்சாதியரும் தீண்டத் தக்கவரே போற்றத்தக்கவரே என்பதை உணர்ந்து வெவ்வேறு உயர்ந்த தாழ்ந்த குலங்களில் உதித்த அடியார்களெல்லோரும் ஒருவரையொருவர்விழுந்து வணங்கியும் ஒருவரோடொருவர் உடனிருந்து உண்டும் வந்தனரல்லரோ? இந்த அடியார்களெல்லோரும் கிறிஸ்துவால்தான் போதிக்கப்பட்டனரோ? இம்மட்டோ? "சாதி குலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை" என்னும் மணிவாசகர் திருவாக்கும், "சாதியாவதேதடா" என்னும சிவவாக்கியர் பாடலும், "ஆத்மாவுக்கு ஜாதி இல்லை; ஜாதியானது வியவகாரத்தின் பொருட்டுக்கற்பிக்கப்பட்டிருக்கின்றது" என்னும் உபநிடத வாக்கியமும் இன்னும் இவைபோன்ற எண்ணில்லாத வாக்கியங்களும் ஏசுக்கிறிஸ்துவின் போதனையின் பின்னர்த்தான எழுந்தனவோ? காந்தியடிகள தாமும் என்ன கூறுகின்றர்? தீண்டத்தகாதோர் எனப்பட்டோரை ஆலயத்துட் பிரவேசிக்க விடவேண்டும் என்று கூறுவதன்முன் அஹிம்சையையன்றோ வற்புறுத்திக் கூறுகின்றர். இதனை எத்தனைபேர் ஊன்றி அவதானிக்கிறர்கள்.

விஷயம் இங்ஙனமாக, உ. தா. ஆசிரியர் அவசியமின்றி இப் பெருமையைத் தமது தலையிற சூடிக்கொள்ளுதல் பேடித்தனமாகும். கிறிஸ்து ஒரு பெரியவர் என்பதை நாம் ஒருபோதும் மறுக்கவில்லை. ஆயின், உலகில் நடைபெறும் ஒவ்வொரு நற் கருமங்களும் அவரிலிருந்தே உற்பத்தியாயின என்று காட்ட முயலுதல் சுத்த அசம்பாவிதமாகும். கிறிஸ்து சமய நாகரீகததாலும் இந்துசமய நாகரீகத்திலிருந்தே ஓரளவிற்கு எடுக்கப்பட்டது என்பதை வணக்கத்திற்குரிய ஹெராஸ் போன்ற ஐரோப்பிய ஆராய்ச்சி நிபுணர்களே காட்டமுன் வந்திருக்கும்போது, கொல்ல வீதியில் ஊசி விற்கப் புகுந்தவன் செயலாக உ. தா. ஆசிரியர் திருவாங்கூர் ஆலயப் பிரவேசம் கிறிஸதுவாலும் கிறிஸ்து சமயத்தவராலுமே நடைபெற்றது என்று கூறுதல் எத்துணைப் பேதைமையாகும்.

அன்றியும் கிறிஸ்தவர்களுக்குள்ளேயே தாண்டவமாடும சாதிவித்தியாசத்தை ஒழிக்க வகையறியாத கிறிஸ்தவர்கள இந்துக்களுக்கிடையே சீர்திருத்தத்தை ஏற்படுத்திவிட்டார்களெனின் எவ்வாறு பொருந்தும்? ஆகவே, இனியேனும் இந்த ஆசிரியர் விஷயத்தை நன்காராயாமல் மனம்போனவாறு தமது பேனவை உபயோகியாமல் இருப்பாராக.

## தலைவர்க்கு வரவேற்பு ஏற்பாடுகள்

### மட்டக்களப்பிற்கு அரசாங்கசபைத் தலைவர் விஜயம்

மட்டக்களப்பு, ஜன 17—

மட்டக்களப்புச் சட்டப் புத்தகசாலையில், நேற்று மாலையில் ஒரு கூட்டம் நடந்தது. முடிக்குரிய நியாயவாதி திரு. ஜி. என். நிலவீரசிங்க கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அரசாங்க சபைத் தலைவர் திரு. வை. துரைசுவாமி அவர்கள் இம்மாதம் முடிவில் முதன்முறையாக மட்டக்களப்புக்கு விஜயம் செய்யும்பொழுது அவருக்குத் தக்க ஒரு வரவேற்பளிக்க என்ன ஏற்பாடுகள் செய்யப்படவேண்டு மென்பதுபற்றிக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

நகரசபைத் தலைவர் திரு. எம். சின்னையாவின் பிரேரணையின் பேரில் திரு. துரைசுவாமியை நல்ல விதமாக வரவேற்பதெனவும், 'லட்சுமி மண்டபத்தில் ஒரு தோட்டக்கச்சேரி வைப்பதெனவும் ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டது.

விவேகானந்தா மண்டபத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் தாய்மொழிப் பெண் பாடசாலையைத் திறந்துவைக்க கனம் துரைசுவாமி இங்கு வருகிறரெனத் திரு.சின்னையா அறிவித்தார்.

## சிசுவை யீன்றவுடன் கடமை பார்க்கச்சென்ற ஆசிரியை

மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு கிராமத்திலேயுள்ள அரசினர் பாடசாலையிற் கல்வி பயிற்றும் கரோலயின் பொன்னம்மா வெனப்படும் உபாத்தியாயப் பெண்ணெருத்தி சென்ற வாரம் புதன்கிழமை அதிகாலையில் ஒரு சிசுவைக் களவிற் பிரசவித்துத் தன் வாசஸ்தானத்திலுள்ள அறையின் மூலையிற் கொட்டப்பட்டிருந்த உமிக் குவியலுட் புதைத்துவிட்டு, உடனே தானே பள்ளிக்கூடத்திற்குப் போய்; அங்குள்ள உபாத்தியாயர் வரவு பதியும் புத்தகத்திலே தான் வந்தமையைப் பதித்துகொண்டு பின் சிறிது நேரஞ் செல்லத் தனக்கு ஏதோ சுகமில்லையெனக் காரணங்காட்டித் தலைமை உபாத்தியாயரிடம் விடுதலை பெற்றுக்கொண்டு வீட்டிற்குத் திரும்பிவிட்டாளாம். அப்படியே அடுத்த நாட் காலையிலும் வித்தியாசாலைக்குச் சென்றளாம். இதற்கிடையில் அவள் செய்த சிசு கத்தி ஆங்குள்ளவர்கள் வன்னிமைக்குப் பிறரால் தெரிவிக்கப்பட, அவர் அவள் வீட்டைச்சோதனை செய்வித்தபொழுது அவள்வீட்டிலுள்ள அறையின் மூலையொன்றில் உமிக் குவியலுள் ஒரு பெண் சிசு பாய்ச்சுருட்டுட் கட்டிப் புதைத்து வைத்தபடி பிரேதமாக கண்டு எடுக்கப்பட்டதாம்.

நீதிஸ்தலத்தில் அவளை விளங்கியபொழுது அவள் தான் குழந்தையைப் பெற்றது மெய்யென்றும் ஆனல் அது செத்துப் பிறந்ததென்றும் சொன்னளாம். அவள் இப்பொழுது விளக்க மறியலில் இருக்கிறள்.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

தைப்பொங்கல் விடுதலையின்பின் இக்கல்லூரி, சென்ற வெள்ளிக்கிழமை (22-1-37) ஆரம்பமாயது. ஆரம்பதினத்தன்று, இக்கல்லூரியிற் சேர்ந்து கற்கவிரும்பி ஐம்பதிற்குக் குறையாத சிறுவர் சிறுமியர் புதியராய் இங்கு வந்துள்ளனர். இன்னும் பல பிள்ளைகள் வருவரெனக் காத்திருக்கலாகும். இக்கல்லூரியில் 'இன்ரர் ஸயன்ஸ்', ஆர்ட்ஸ் முதலிய உயர்தர வகுப்புகள் திறமையோடு வைத்துப் பயிற்றப்படுகின்றன. மேலும் J. S. C. வகுப்பிலும் லண்டன் மற்றிக் வகுப்பிலும் பயிலும் மாணவர் ஆண்டிற்கு இருமுறை பரீட்சையெடுக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்னும் கல்லூரி விடுதிச்சாலை மாணவரை மேற்பார்வை செய்தற்கும் படிப்பு விஷயத்தில் அவர்களுக்குத் துணைபுரிவதற்கும் இக்கல்லூரி ஆசிரியர்கள் தாமாக உடம்பட்டுக் கிரமமாக அங்ஙனம் தம் கடமையைச் செய்து வருகிறர்கள். குறைந்த செலவோடும் அற்பகாலத்தில் அதிக கல்வியை மாணுக்கர்க்குப் பயிற்றுதற்கான முயற்சியைச் செய்வதில் இக்கலாசாலைப் பிரதம ஆசிரியரும் ஏனைய ஆசிரியர்களும் கண்ணுங்கருத்துமாயிருக்கின்றன ரென அறிந்து பெரிதும் மகிழ்ச்சியுறுகின்றேம்.

## அகில காரைநகர் விளையாட்டுக் கொண்டாட்டம்

காரைநகர் இந்து ஆங்கிலவித்தியாசாலைப் பழைய மாணவர் சங்க ஆதரவின்கீழ் நடாத்தப்பெறும்.

அகில காரைநகர் விளையாட்டுக் கொண்டாட்டம் 1937 ம் ஆண்டு ஏப்பிரில் மீ 16ம், 17ம்தேதி (ஈசுரஹு சித்திரை மீ சம், ௫ம் தேதி) வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் கிழத்திசைக் கடற்கரையோரத்து விளையாட்டு நிலத்தில் நிகழும்; பங்குபற்ற விரும்புவோர், விண்ணப்பப் பத்திரத்தைத், தாம் பிறந்த தேதி விலாசம், நிகழ்ச்சி விபரங்களோடு 1937ம் ஆண்டு மார்ச்சு மீ 20ம் தேதிக்கு முன்பாக மேற்படி சங்கக் காரியதரிசிக்கு அனுப்புதல் வேண்டும்.

வேறு விபரங்களையும் காரியதரிசியிடம் தெரிந்துகொள்ளலாம்.

## தைப்பூசம்

"மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றன் கபாலீச்சரமமர்ந்தான்
நெய்ப்பூசம் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணுதே போதியோ பூம்பாவாய்."
—தேவாரம்.

நாளை தைப்பூச புண்ணிய தினமாகும். இதுமாத்திரமன்றிப் பூரணை தைச்செவ்வாய் என்னும் விசேஷ திதி கிழமையிரண்டும இக் நட்சத்திரத்தோடு சேர்ந்து நிகழ்கின்றன. தைச்செவ்வாய் வைரவமூர்த்திக்கு விசேஷதினமாகும். மூன்று விசேஷங்களோடுகூடி நிகழும் இப் புண்ணிய தினத்திற் சைவநன்மக்[illegible]யுள்ளாரனைவரும் விசேஷ தபஞ் செபம் விரதம் ஆலயதரிசன மென்னுமிவைகளை ஆசாரசீலராய்ப் பக்தி பூர்வமாகச் செய்து நன்மை பெறுவார்களாக.

## சுயேச்சைப்பிரதிக்ஞை

### சென்னையில் தடையுண்டு

சென்னை, ஜன 23—

காங்கிரசின் சுயேச்சைப் பிரதிக்ஞை கவர்ன்மெண்டார் தடை செய்யப் போவது நிச்சயமென்று பொலிஸ் கமிஷனர் இன்று டெலிபோன் மூலம் அறிவிக்கிறர்.

வியாழக்கிழமையன்று தடைசெய்யப்போவதாக அறிவித்தார். வெள்ளிக்கிழமை தடை இல்லையென்று அறிவித்தார். இன்று மீண்டும் அதை மறுத்துத் தடை உண்டு என அறிவித்திருக்கிறர்.

# பட்டினபரிபாலன சங்கங்களின் மகாநாடு

## திரு. சாம். சபாபதி அவர்களின் வரவேற்புரை

### 'பனைமரமே வடபூமியாகிய யாழ்ப்பாணத்தவரின் தஞ்சம்'

—:0:—

யாழ்ப்பாணம், வெள்ளி—

இன்றுகாலை யாழ்ப்பாணத்திற் பட்டினபரிபாலன சங்கங்களின் வருடாந்த மகாநாடு கூடியது.

ஏறக்குறைய 50 பிரதிநிதிகள் கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்தார்கள். அன்றியும் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா, அரசாங்க சபைத் தலைவர் திரு. வை. துரைசுவாமி, அதிகாரம் நாகநாதர் காங்கேசன் துறைப் பகுதி அங்கத்தவர் திரு. எஸ். நடேசன் ஆகியோரும் சமுகமளித்திருந்தார்கள். சுகவீனம் காரணமாகக் காரியதரிசி திரு. ரீ. சி. பி. பேர்னண்டோ கூட்டத்திற்கு வராமையால் அவருக்காகக் கடமை பார்ப்பதற்குத் திரு. ஆஷ்லி. பிரிஸ் தெரிவு செய்யப்பட்டார். திரு. வின்சென்ட் மெண்டிஸ் தலைமை வகித்தார்.

யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன சங்கத்தின் சார்பாக, அதன் தலைவர் திரு. சாம். சபாபதி பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினர். இவர் தமது சொற்பொழிவின் போது ஸ்தல ஸ்தாபன மந்திரியின் சமுகத்தைப் பற்றிக் கூறுமிடத்து அவர் அக் கூட்டத்திற்கு வந்திருத்தல் கூட்டத்திற்குப் பெருமையையும், கனத்தையும், அறிவுரைகளையும் அளிக்கத் தக்கதாக இருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

#### பனைமரப் பூமி

மேலும் திரு. சபாபதி பிரதிநிதிகளை வரவேற்கு முகத்தாற் குறிப்பிட்டதாவது:—

பனைமரப் பூமியாகிய யாழ்ப்பாணத்திற்கு நாம் உங்களை மனமுவந்து வரவேற்கின்றோம். பனைமரமே வடபூமியாகிய யாழ்ப்பாணத்தவரின் தஞ்சமாக உள்ளது. கானலில் வளர்ந்து வெயிலிற் சாகாமல் புயலில் விழாமல் நின்று வானளாவ வளர்ந்து கைகளை நீட்டி நிற்கும் இப்பனையே யாழ்ப்பாண மக்களின் தஞ்சமாகும்.

உங்களிற் பலருக்கு யாழ்ப்பாணம் ஒரு புதிய நாடாக இருக்கலாம். ஆயின், நீங்கள் யாழ்ப்பாணத்தை விட்டுச் செல்லும் போது, உங்களோடு அன்னியோன்னியமான நட்புரிமை யுள்ளவர்களும் உங்களை மனமுவந்து வரவேற்றவர்களுமாகிய யாழ்ப்பாணத்தவரின் அன்பான ஞாபகத்தை நீங்கள் மறந்துவிடமாட்டீர்களென்றே நான் நம்புகின்றேன்.

இதுவே இம்மகாநாடு யாழ்ப்பாணத்திற்கூடும் முதன் முறையாகும். இனி வரும் வருஷங்களில் இங்கு இன்னும் அதிகமான கூட்டங்கள் கூடுமென்றே நம்புகின்றேன். அதனால், இலங்கையிலுள்ள, சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர் முதலிய சகல வகுப்பாருக்கிடையிலும் ஒற்றுமையும் நல்லெண்ணமும் வளருதல் முடியுமென்றும் நம்புகின்றேன்.

இன்று நாம் கூடியுள்ள இம் மண்டபம், எனக்கு முன் யாழ்ப்பாணப் பட்டினபரிபாலன சபைத் தலைவராக விருந்த திரு. ஆர். ஆர். நல்லையா அவர்களின் முயற்சியாலும், சித்திரச் சுவையினாலும் வனைய பிறவற்றாலும் ஏற்பட்டதாகும். அன்றியும் இலங்கை ஸ்தல ஸ்தாபன முறையில் ஏற்பட்டுள்ள புதிய சகாப்தத்திற்கு ஓர் அறிகுறியாகவும் இது விளங்குகின்றது.

#### மொறட்டுவைத் தலைவர் குறிப்புரை

பிரதிநிதிகளின் சார்பாக, மொறட்டுவைப் பட்டின பரிபாலன சங்கத் தலைவர் திரு. ஜி. எஸ். ஏ. பெரேரா தமக்களித்த அன்பான வரவேற்பிற்காகத் திரு. சபாபதி அவர்களுக்கு நன்றி புகன்றனர்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:-

சென்ற மகாநாடு மொறட்டுவையில் நடைபெற்றபோது, யாழ்ப்பாணத்தின் பிரதிநிதியொருவராகிய திரு. பி. பதஞ்சலி, இவ்வருஷம் இம் மகாநாட்டை இங்கேயே கூட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இன்று கூடும் கூட்டத்தினால் சகலருக்கும் சிறந்த நன்மைகள் விளையுமென்று நம்புகின்றேன்"

மகாநாட்டில் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. பண்டாரநாயக்கா அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவும் பிறவும் அடுத்தஇதழில் வெளியிடப்படும்.

## ஓடும் புகைவண்டியி லிருந்து குதித்தோடிய கள்ளன்

### புகைவண்டி நின்றவுடன் பரபரப்பு

#### எதிரிக்கு அபராதம்

(நமது நிருபர்)

இம்மாதம் 22ந் திகதி காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் காங்கேசன் துறைக்குச் செல்லும் புகைவண்டியில், கண்ணப்பன் கணேசன் என்னும் ஒருவன் பிரயாணச் சீட்டின்றி கள்ளமாகப் பிரயாணஞ்செய்வதைச் சீட்டுப் பரிசோதகர் S. இராசரத்தினம் என்பவர் கண்டுபிடித்து, அவனை தன்னோடு வைத்திருந்தபோது, அவன், புகைவண்டி மிக விரைவாக ஓடிக்கொண்டிருக்கும்போதே, சாவகச்சேரிக்கும் மீசாலைக்குமிடையே வண்டியிலிருந்து குதித்து ஓடினான். உடனே வண்டி நிறுத்தப்பட்டது. ஜனங்களுக்கிடையே பரபரப்பு ஏற்பட்டது. றெயில்வே அதிகாரிகள் அவனைத் துரத்திச் சென்றபோது, அவன் யாரோ ஒருவருடைய வளவுக்குள் ஒடிக்களைத்து விழுந்தான் எனத் தெரிகிறது. அதிகாரிகள் அவனைப் பிடித்துக் கொண்டு சென்று பிரயாணச் சீட்டின்றிப் புகைவண்டியிற் பிரயாணஞ் செய்தானெனவும், ஓடும் புகைவண்டியிலிருந்து குதித்தானெனவும் இரு குற்றச் சாட்டுக்களை அவன் மீது சுமத்திச் சாவகச்சேரிப் பொலிஸ்கோட்டில் வழக்குத் தொடர்ந்தனர். அவனுக்கு உடம்பிற் பல காயங்கள் காணப்பட்டன. விசாரணையின்பின், நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு முதலாம் குற்றச்சாட்டின் பேரில் 25 ரூபா அபராதமும் அல்லது 3 வார வெறுங்காவல் தண்டனையும் இரண்டாம் குற்றச் சாட்டின்பேரில், 20 ரூபா அபராதமும் அல்லது 2 வார வெறுங்காவல் தண்டனையும் விதித்தார்.

—

#### தேகவியோகம்

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவனை ஜெனன ஸ்தானமாகவும், ஓட்டுசுட்டான் தான்தோன்றி யீச்சுரர் புதுக்குடியிருப்புக் கந்தசாமி கோவில்களினர்ச்சகருமாகிய பிரமஸ்ரீ தம்பையா சேஷையர் 1936-ம் ஆண்டு மார்கழிமாசம் நடேசனின் உற்சவத்திற்குச் சிதம்பரஞ் சென்றவந்தபின் உற்பவித்த வயிற்றுநோய் காரணமாகப் புண்ணியதினமாகிய தைப் பொங்கலன்று பகல் பன்னிரண்டு மணியளவில் மனைவிமக்கள் சுற்ற உற்றார் அயலார் அழற இப்பூவுலக வாழ்க்கையை ஒருவினர்.

இவர் வன்னிப் பகுதியில் சமயம், கல்வி என்பவற்றில் அரிய தொண்டாற்றியவர். இவருடைய பிரிவு வன்னிநாட்டார்க்குப் பெருங் குறையையுண்டாக்கியது. —கடித.

#### விவாகம்

சித்திரவேல் - மகேசுவரியம்மாள்

சென்ற சனிக்கிழமை (23-1-37) அதிகாலை 6½ மணி வரையில் நேர்ந்த சுபமுகூர்த்தத்தில், திருக்கோணமலையைச் சேர்ந்த கோமரன்கடவலையில் அப்போதிக்கரியாகக் கடமை பார்க்கும் திரு. K. S சித்திரவேலுக்கும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியருளொருவராகிய திரு. A. K. பொன்னம்பலமவர்களின் தமயனாராகிய கந்தையாவின் சிரேட்ட புத்திரி ஸ்ரீமதி மகேசுவரியம்மாளுக்கும் யாழ்ப்பாணப்பட்டினப் பெரியதெருவிலுள்ள மணமகனில்லத்திற்றானே விவாகம் விதிப்படி சிறப்பாக நிறைவேறி அன்று முதல் மூன்று நாட்களாக உபசாரணைக்கொண்டாட்டமும் நடைபெறலாயது. தம்பதிகள் சகல ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் இறைவன் அருள் புரிவாராக.

சேந்திநாதசர்மா-கோமளாம்பாளை

சென்ற சனிக்கிழமையிரவு 4 மணியளவில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் வண்ணார்பண்ணை சிவலிங்கப்புளியடி பிரமஸ்ரீ. கா. மகேசுவரக் குருக்கள் சிரேஷ்ட புத்திரன் திரு. சேந்திநாத சர்மாவுக்கும், அளவெட்டி பிரமஸ்ரீ மா. சண்முகக் குருக்கள் புத்திரி ஸ்ரீமதி கோமளாம்பாளைக்கும் மணமகன் இல்லத்தில் விவாகம் இனிது நிறைவேறி, அன்று முதல் நான்கு நாட்களாகக் கிரியைகளும் உபசாரணைக் கொண்டாட்டமும் நடைபெறலாயின. தம்பதிகள் அட்ட ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழும் வண்ணம் இறைவன் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

நடராசா—ரூபவதி

நிகழும் தாதுவருஷம் தைமீ (23-1-37) 10-ந் திகதி சனிக்கிழமை இரவு 9-30 மணியளவிலுள்ள சுபமுகூர்த்தத்தில் வண்ணார்பண்ணை பிரசித்த நொத்தாரிஸ் திரு க. சு. விசுவாசு அவர்களின் புத்திரன் டக்டர் திரு. நடராசா அவர்களுக்கும் யாழ்ப்பாணப்பகுதித் தலைமை டக்டர் திரு கா. பொன்னையா அவர்களின் சிரேஷ்டபுத்திரி ஸ்ரீமதி ரூபவதியம்மாளுக்கும் திருமணம் இனிது நிறைவேறியது. மணமக்கள் சகல பேறுகளும் பெற்று இனிது வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

## NOTICE OF SALE.

### கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

இல. 10.588

காரைதீவு மேற்கு, கணபதிப்பிள்ளை பொன்னம்பலம் வழக்காளி.

(1) காரைதீவு மேற்கு காலஞ்சென்ற சண்முகம் சக்கரப்பிள்ளை கைம்பெண் மீனாட்சி தத்துவகாரியும் தன்சுபமே பாறுப்பினலும்.

(2) காரைதீவுமேற்கு பாழ தமாரவேலு (3) காரைதீவுமேற்கு முருகர் இராமுப்பிள்ளை எதிரிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 1936ம் ஆ. கார்த்திகை மீ 17ம் உ 10,588 இலக்கத் தீர்வையின் பிரகாரம் இதன் பின்னும் காணப்படும் ஆதனங்கள் கொம்மிஷனர் கந்தையா முத்துக்குமாரு ஆகிய என்னால் 1937ம் ஆ. மாசி மீ 20உ சனிக்கிழமை பின்னேரம் இரண்டுமணி தொடக்கம் குறித்த காணிகளிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணியின் விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பற்று காரைதீவு இறைதங்கோடை குமிளிப்பிட்டியில் மேற்குத் தலைமடை நிலப்பரப்பு பத்து (10) எல்லை கிழக்கு முருகேசு பெண் சேதுப்பிள்ளையின் ஆதனம். வடக்கு வாய்க்கால், மேற்கு பாழ கைம்பெண் தெய்வானையும் பிள்ளைகளுடைய ஆதனம். தெற்கு சங்கரப்பிள்ளை நல்லதம்பியும் வேலுப்பிள்ளை வயித்திலிங்கத்தினுடைய ஆதனம். இதடங்கலும்.

(2) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பற்று காரைதீவுஇறைதங்கோடை காரைப்புரியிலும் விரியமபுலமும் நிலப்பரப்பு (25) இருபத்தைந்தில் மேற்குப்புறமாய வடக்குப் பக்கத்தால் அரைப்பங்கு (12½) பன்னிரண்டரை நிலப்பரப்பு, பனைகளும் வடலிகளும், தென்னைகளும், எல்லை கிழக்கு எட்டுமுள அகலமுள்ள முதலாம் எதிரியின் மிகுதி ஆதனமும் அவவின் காலஞ்சென்ற புருஷனின் ஆதனமும், வடக்கு ஒழுங்கை, மேற்கு கணபதிப்பிள்ளை கந்தப்புவின் ஆதனம். தெற்கு மிகுதி ஆதனம். இதடங்கலும்.

காரைதீவு 23-1-37 — க. முத்துக்குமாரு கொம்மிஷனர்

(Mis 245. 25-1-37)

## நாகர் கோவிலில் காந்தியடிகள்

### "நமக்குள் ஜாதி வேற்றுமை இருக்க வழியே கிடையாது"

### "நான் ஓர் எளிய தோட்டி" தெருக் கூட்டுவதில் யான் தேர்ச்சி பெற்றவன்

நாகர் கோவில் ஜன 15—

நேற்று மாலை இவ்விடம் வந்த மகாத்மாஜி, இவ்வூரிலுள்ள நாகராஜ ஸ்வாமி கோயிலுக்கு விஜயஞ் செய்தார். கோயிலதிகாரிகளும் தேவஸ்வம் கமிஷனரும் மகத்தான உற்சாகத்துடன் காந்தியடிகளை வரவேற்றனர். சாயங்காலம் பூஜை நேரமானதால், அப்போது கோயிலில் ஏராளமான கூட்டம். காந்திஜீயும் அவருடன் சென்ற ஹரிஜனக் கோஷ்டியும் கோயிலைச் சுற்றி வந்ததும் பிரதான சந்நிதிக்கு வந்து சுவாமியை நமஸ்கரித்தனர்.

கோவிலில் முக்கிய அர்ச்சகர் காந்திஜிக்கு பிரசாதங்கள் கொடுத்து விட்டு, கோயில் ஆயிரக் கணக்கான வருஷங்களானதென்றும் ஆதியில் ஜனங்களால் ஸ்தாபிதமானதென்றும் பல ரகஸ்யங்களைத் தெரிவித்தார். தவிர, நாகராஜ ஸ்வாமி பிரதிஷ்டையாகியிருக்குமிடம் ஒரு சிறு தடாகம் போன்ற கட்டிடத்தில் அடிக்கடி பொடி மணலுக் தெளிந்த நீரும் ஸ்வாமியின் பாதங்களிலிருந்து கசிந்து வெளிவருமென்றும் இந்த மணலும் நீருமே பிரஸாதமாக வழங்கப்படுகிறதென்றும் அர்ச்சகர் கூறிய போது மகாத்மாவுக்கு அதிசயமான ஆச்சரியமுண்டாயிற்று.

#### கன்னியா குமரி விஜயம்

காந்திஜியின் கோஷ்டி நேற்று இரவு 8-30மணிக்குக்கன்னியா குமரிக்கு வந்து சேர்ந்தது. காலையில் ஸ்நானத்தை முடித்துக்கொண்டதும் மகாத்மா கடற்கரையில சற்று உலாவினர்.

யதேஷ்டமான கூட்டம் பின் தொடர, முன்னே ஹரிபஜனைக் கோஷ்டியார் செல்ல, மகாத்மா காந்தி கன்யாகுமரி அம்மன் கோவிலுக்குச் சென்றார். ஸ்ரீமான்கள் சங்கனச்சேரி பரமேஸ்வரன் பிள்ளை, மகாதேவ தேசாய், பியாரிலால், ஸ்ரீமதி ஜயப்பிரகாஷ் நாராயணன் இன்னும் பலரும் மகாத்மாவுடன் கூடச் சென்றனர். கோயிலதிகாரிகளும் தரிசனத்திற்காக வந்திருந்தவர்களும் மகாத்மாவை வரவேற்றனர்.

அம்மனின் விக்கிரகத்துக்குச் சந்தனக்காப்பு செய்யப்பட்டிருந்தது. விளக்குகளோ ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசித்தன. மகாத்மா மன உல்லாசத்துடன் தேவியை வணங்கினர். அங்கிருந்து வெளிவருகையில், அழகாக வரையப்பட்டிருந்த சில கோலங்களைக் கண்ணுற்று மகிழ்ந்தார்.

#### சுசீந்திர க்ஷேத்திரம்

மாலை 5-30 மணிக்கு சுசீந்திரத்துக்குப் புறப்பட்டார். சில வருஷங்களுக்கு முன்னே பொது வீதிகளில் எல்லா ஜாதிகளையும் விடவேணுமென்பதற்காக சத்தியாக்கிரகம் நடந்த இடம். சுசீந்திரம் எனவே பேர்வாங்கிய புண்ணிய க்ஷேத்திரம்.

மகாத்மாவைவரவேற்பதில் பள்ளி மாணவர்களும் ஊர் ஜனங்களும் ஒன்று கூடினர். மகத்தான வரவேற்பு மகாத்மா காந்திக்கு ஜே! வந்தே மாதரம் என்ற கோஷங்கள் விண்முட்டிச் சென்றன.

#### பிராமணர் ஆலயம் திறந்து வைக்கப்பட்டது

காந்திஜி ஆத்திக்கள், முதலிய இடங்கள் வழியாக இன்று வர்க்கலை முதலிய பல க்ஷேத்திரங்களுக்கு விஜயம் செய்தார். வர்க்கலையில் தன்வாபுரம் என்னுமிடத்திலுள்ள ஒரு கோயில் பிராமணருக்கே பூரணமான பாத்தியதையுடையது. இன்று மகாத்மா விஜயத்தின் ஞாபகார்த்தமாக எல்லா ஜாதியினருக்கும் அது திறந்து விடப்பட்டது.

#### சிவகிரி மடம்

இன்று பிற்பகலில், காந்திஜி கொல்லத்துக்குப் பிரயாணமானார். போகும் வழியில் சிவகிரி மடத்துக்கு விஜயம் செய்தார். சிவகிரிமடம் நாராயண குரு ஏற்படுத்தியது. அங்கே தற்போது குருவாக விளங்கும் ஸ்வாமி தர்தீர்த்தர் மகாத்மாவை வரவேற்றார்.

"இந்த மடத்தையும் ஸ்ரீ நாராயண குருவையும் பற்றி எனக்கு முன்னமேயே தெரியும். ஸ்ரீ நாராயண குருவின் உபதேசங்களில் பெரும்பாலானவை. உலகத்திலே மதமென்பது ஒன்றே. அதற்குக் கிளைகள் பல உண்டு என்பதே எனது சித்தாந்தம். ஒரு சிருஷ்டி கர்த்தாவின் குழந்தைகள் நாமெல்லோரும். அப்படியிருக்க, நமக்குள் ஜாதிவேற்றுமை இருகக் வழியே கிடையாது. தொழிலில் உயர்வு தாழ்வு கிடையாது.

#### நான் ஒரு தோட்டி

எழுத்திலும் சரி அர்த்தத்திலும் சரியே, நான் ஒரு தோட்டி. நான் கன்கறிவேன். அந்தக் காரணத்தைச் சுத்திசெய்யும் வல்லமையை அதிகப்படுத்திக் கொள்வதற்கு நான் முயன்று வருகிறேன். அதன் பயனுகச் சத்தியத்தை அதன் இயற்கையான ஒளியிலே உணர்ந்து அதைவெளியிடுவதற்குச் சக்தியுள்ளவனாக விரும்புகிறேன்.

பரிப்பாட்டிலுள்ள ஹரிஜனக் காலனிக்குகாந்திஜி விஜயம்செய்தார். காந்திஜியைக் காண்பதற்காகவும் அவர் கல்லுரைகளைக் கேட்பதற்காகவும் 30 மைல் வட்டாரத்துக்குள்ளிருந்த ஜனங்களெல்லோரும் அங்கே சேர்ந்திருந்தார்கள். அவர்களுடைய முயற்சிகளைப்பாராட்டி விட்டுப் பிரகடனத்தை அதன் முழு அர்த்தத்திலும் ஹரிஜனங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும், ஜாதிஹிந்துக்களுடைய சேர்க்கையையும், உதவியையும் இதன்பொருட்டு அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் மகாத்மா சொன்னார், மற்றும் அவர் சொல்லியதாவது:—

#### நம்பிக்கையிருந்தால் பயனுண்டு

நாஸ்திகருக்கும் நம்பிக்கையற்றோருக்கும் வேஷதாரிகளுக்கும்கோயில்களிலொன்றுமே இல்லையெனத் தோற்றலாம், ஆனல் நம்பிக்கையுள்ளவருக்குப் பயனுண்டு. அடிக்கடி கோயிலுக்குப் போவது நிறைந்த மனக் கனிவுடனும், பச்சாத்தாபத்துடனும், பக்தியுடனும், அங்கு தொழுவது இவற்றால் வாழ்க்கையின் லக்ஷியங்கள் சிறப்படையத்தான் செய்யும்.

இங்கிருந்து மகாத்மா கொல்லத்துக்குப் பிரயாணமாகி மாலை அங்கே போய்ச் சேர்ந்தார். போகும் வழியெல்லாம் ஆயிரக்கணக்கான கிராமவாசிகள் கும்பல் கும்பலாய் மகாத்மாவைத் தரிசித்துச் சென்றனர். அங்கங்கே காது செவிடுபடும்படியான ஜயகோஷங்கள் ஜே கோஷங்கள்.

## கண்டி உதவிமாகாணத் தலைவர்

திரு. கே. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் லீவிலிருந்து பெப்ருவரி மாதம் 22 ம் திகதி திரும்பியதும், கண்டி அடிஷனல் உதவி அரசாங்க ஏஜண்டாகத் தலைவராக (Agent)வும் மார்ச் மாதம் 17 ந் திகதியளவில், திரு. ஆர். எம். பென்மனிபென்னி விலகியதும் கண்டி உதவி மாகாணத் தலைவ[illegible]

## பொட்டளி வியாபாரிக்குக் கோடரி அடியா?

### வியாபாரி கோட்டிற் கூறிய சாக்ஷியம்

நமது நிருபர்

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் 1 கா கந்தன் 2 க கந்தையா 3 கு வேலன் 4 சு யேசப் ஆகியவர்கள் நவாலியில் வசிக்கும் கந்தன் சின்னப்பொடியன் என்பவனுக்குக் கோடரியால் தலையிலும கையிலும் அடித்துக் காயப்படுத்தியதாகக் குற்றஞ் சாட்டிய வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

கந்தன் சின்னப்பொடியன் கூறிய தாவது:-

நான் சீலை வியாபாரி. நான் இச்சம்பவத்தன்று சீலைப்பொட்டளியுடன் எதிரிகள் இருக்கும் ஒழுங்கையால் வரும்போது இரண்டாம் எதிரிகள் இருக்கும் ஒழுங்கையால் வரும்போது இரண்டாம் எதிரி என்னைக் கண்டு உன்னை இவ்விடத்தில் வந்து வியாபாரம் செய்யவேண்டாம் என்று சொல்லியிருக்கவும் உன்னை யார் இவ்விடம் வரச் சொன்னதென்று ஓர் கோடரியை ஓங்கி என் தலையில் அடித்தார். திரும்பவும் இருமுறை எனது கைகளில் அக்கோடரியால் அடித்தான். நான் நிலத்தில்விழுந்துவிட்டேன். மற்றவர்களும் எனைகுப பொல்லுகளால் அடித்தனர். இவர்கள் எனை அவ்வொழுங்கையில் காத்து நின்றுதான் இப்படிச் செய்தார்கள். முதல் மூவரும் பள்ளர். 4ம் எதிரி பறையன். நான யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலும் காயன்மார்கட்டு ஆஸ்பத்திரியிலும் சிகிச்சைக்காக இருந்திருக்கிறன்.

எதிரிகள் குற்றவாளிகளல்லவெனப் பகர்ந்தார்கள். நீதிபதி மறு விசாரணையின் பொருட்டு வழக்கை வருகிற 17-2-37 க்குத் தவணையிட்டார்.

## அறிவித்தல்

இதன் கீழ்க் கையொப்பம் வைக்கும், ஆனைக்கோட்டை பொன்னம்பலம் விநாசித்தம்பியாகிய நான் தெரிவிப்பது:— கீழே சொல்லப்பட்ட ஈட்டுறுதிகள் இரண்டு என்வசமிருந்து தவறிவிட்டன.

1–ம் உறுதியின் விபரம்:

தன்னையைச் சேர்ந்த மருதன் கணபதியும் பெண் தங்கமும் ரூபா 400 பெற்றுக்கொண்டு, சுதுமலை பிரசித்த நொத்தாரிஸ் ஸ்ரீ கு. ஆறுமுகம் (11-10-32) நிறைவேற்றிய 14284-ம் இலக்க உறுதி.

2–ம் உறுதியின் விபரம்:

சுதுமலை A. வைத்தியலிங்கம் என்பவர் ரூபா *1000 பெற்றுக்கொண்டுஷை நொத்தாரிசுவால் (29-10-34) நிறைவேற்றிய 15566-ம் இலக்க உறுதி.

இந்த உறுதிகளைக் கொண்டு எந்த நொத்தாரிசுவாகுதல் எவ்வகையான சாதனமும் பிறப்பிக்கக்கூடாதென்றும், அவ்வுறுதிகளகப்பட்டால் கொண்டுவந்துதருபவர்களுக்கு ரூபா 10 உபகாரமாகக் கொடுப்பேனென்றுந் தெரிவிக்கிறேன்.

பொ. விநாசித்தம்பி
ஆனைக்கோட்டை
13–1–37.

(Mis. 235. 18 to 25-1-37)

* ஜே [முந்திய பிரசுரங்களில் இத் தொகை ...00 ரூபா எனத் தவறாய் ... 1000 ரூபா எனத்

## இன்றைய திருவாங்கூர் சமஸ்தானம

2ம் பக்கத் தொடர்ச்சி

சிலைமுறையில் கட்டப்பட்ட கட்டடங்கள் பல இருக்கின்றன. இறுதியாக ஆங்கில 'ஈஸ்ட் இந்தியக் கம்பெனி' யோடும் வியாபாரம் நடந்தது. இதன் மூலமாகவே சுமார் நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் இங்கிலாந்துக்கும் திருவாங்கூருக்கும அரசியல் சம்பந்தம் ஏற்பட்டது.

கல்வி.

நாட்டின் வளனுக்கேற்ப மக்களும் அறிவிலும் சக்தியிலும் உரம்பெற்றிருக்கிறார்கள். சென்ற நூறு வருடங்களாகப் பல சீர்திருத்தங்கள் நடைபெறுகின்றன. சமஸ்தான வருமானத்தில் ஐந்தில் ஒரு பாகம் கல்விக்காகச் செலவழிக்கப்படுகிறது. 'பர்தா' முறை இல்லை. அரசியல், சமூகம், கல்வி முதலிய துறைகளில் ஆண்—பெண் வேற்றுமை பாராட்டுதல் இல்லை. ஆதலால் கல்வி முன்னேற்றத்தில் சமஸ்தானம் சிறந்து நிற்கிறது. சென்னைச் சர்வகலாசாலையோடு இணைக்கப்பட்ட எட்டு சமஸ்தானக் கல்லூரிகள் இருக்கின்றன. ஜனத்தொகையில் நூற்றுக்குப் 13 பேர் பள்ளிமாணவர். இரண்டு சதுர மைலுக்கு ஒரு பாடசாலை இருக்கிறது. இவ்வெண்கள் பிரிட்டிஷ் இந்தியாவை விடப் பன்மடங்கு அதிகமானவையே.

மலையாளத்திலும் ஆங்கிலத்திலும் பிரசுரிக்கப்படும் 120 பத்திரிகைகள் சமஸ்தானத்தில் இருப்பதால் கல்வியின் நிலைமை ஒருவாறு விளங்குதல் கூடும்

கல்வி அபிவிருத்தியோடு ஆண் பெண் இரு பாலாருடைய உத்தியோக வேட்டையும் ஒன்று சேர்ந்தமையால் படித்தவரில் வேலையில்லாத் திண்டாட்டம் தலைகாட்டுகிறது பணக்காரர் பலர் இராத சமஸ்தானம் திருவாங்கூர் எங்கும் நடுத்தரமானவரே இருக்கிறார். இப்போதைய உலக நெருக்கடி இவர்களையும் தாக்கியிருக்கிறது.

வேண்டிய மாறுதல்.

இந் நெருக்கடியைப் போக்க என்ன செய்தல் வேண்டும்? கல்வி முறையையே மாற்றுதல் வேண்டும். தொழிற் சாலைகள் பல தோன்றுதல் அவசியம். வேலையில்லாமைக்குத் துணைபுரியும் பெரிய தொழிற்சாலைகள் அவசியமாகா. குடிசைத் தொழில்கள் பல தோன்றுதல் சிறப்பு. பெரிய விவசாயிகளும், படித்தோரும் வேலையற்ற சமயங்களில் செய்தற்கான பல உபதொழில்கள் ஏற்படுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன இதுவே நடுத்தர வகுப்பாரின் வேலையில்லாமையை ஒழிக்கச் சிறந்த வழியாகும். தற்போதுள்ள மகாராஜா ஒரு பெரிய அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் தமது இராஜ போகத்தில் இயமாந்திருக்க விரும்புகிறார் இல்லை. இந்தியப் படத்தில் ஒரு சிறந்த அமைப்பு திருவாங்கூருக்குக் கிடைக்க வேண்டும் என்பதே அவரது பேரவா. அவரது அவாவுக்கேற்ப மக்களது ஆற்றலும் உடனிருப்பது சிறப்பாகும் திருவாங்கூர் மக்கள் இந்தியா முழுமையு மட்டும் அல்லாது உலகத்தின் பல பாகங்களிலும் குடியேறிப் புகழ் பெற்றிருக்கிறார்கள்.

திருவாங்கூரில் 50 வருடங்களுக்கு முன் சட்டசபை தோன்றியது. இன்று அச்சபையிலே ஆண்களும் பெண்களும் வீற்றிருக்கிறார்கள் பண நிர்வாகம் போன்ற பெரிய விஷயங்கள அங்கு விவாதிக்கப்படுகின்றன. எல்லா வகுப்பாருக்கும் அச்சபையில் பிரதிநிதித்துவம் உண்டு. அரசாங்க உத்தியோகங்களுக்குப் படித்தவர்களைத் தெரிவுசெய்ய ஒரு பொதுஜன உத்தியோகக் கமிஷனும் இருக்கிறது.

மத ஒற்றுமை.

சமஸ்தானத்தில் மதத் துவேஷமே தலைகாட்டுவது இல்லை. கிறிஸ்தவரும், மகமதியரும் தமக்குள் பல பிரிவினராக இருந்தும் ஒன்றுபட்டே சமாதானத்துடன் வாழ்கிறார். இங்கிருப்பதுபோலச் சதுர மைலுக்கு அதிக எண்ணிக்கையுள்ள இந்துக் கோயில்களும், மாதாகோயில்களும், பள்ளி வாயில்களும் இந்தியாவில் வேறு எங்கும் இல்லை; உலகத்தில் சிற்சில பாகங்களிலேயே இவ்வாறு இருக்கின்றன.

பண நிர்வாகத்திலும் சமஸ்தானம் முதன்மை பெற்றே விளங்குகிறது. சில நாட்களுக்கு முன்னர்ப் பொதுஜனக் கடன் பத்திரங்கள் மூலமாக ஐம்பது லக்ஷம் ரூபாய் கீர்—மின்சாரத் திட்டத்துக்காக வெகு சுலபத்தில் சேர்க்கப்பட்டது. 'இதுவே பண நிர்வாகத்தின் சிறப்பைக் காட்டுவதாகும். மகாராஜாவின் குடும்பச் செலவுக்காகச் சமஸ்தான வருவாயில் நூற்றுக்கு ஐந்து பங்குக்குக் குறைவாகவே தரப்படுகிறது.

சங்கீதம்

இவ்வளவும் கூறி இறுதியாகச் சங்கீதத்தை விட்டுவிடுதல் தவறு சமஸ்தானம் சங்கீதத்துக்கும் வேண்டிய உதவியைச் செய்தே வருகிறது. அரச குடும்பமே சங்கீதத்துக்கு வழிவழி வந்த ஒரு பெருமையைப் பெற்றிருக்கிறது. இவ்வரச குடும்பத்தில் சுவதி திருநால் என்று ஒர் அரசர் இருந்தார். அவர் இசை ஞானி; கவிப்புலவர்; சென்ற இடங்களிலெல்லாம் சிறப்பாக வரவேற்கப்பட்டார். அதனால் திருவாங்கூரில் ஏற்பட்டிருக்கிற ஒரு புத்துணர்ச்சிக்கு அரசகுடும்பமே காரணமாகும்.

—'தி கொமஷியல் றெவ்யூ'

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு கோட்டடி மு. க. இ. க. கந்தையா என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:

| நம் | மூ | ஆ | ரு | பெயர் ஊர் நகைவிபரம் |
|---|---|---|---|---|
| 6394 | 3 | 1935 | 150 | மு. சதாசிவம் முளாய் சங்கிலி 2 |
| 6487 | 4 | 1935 | 38 | இ. கந்தசாமி வண்கிழக்கு முப்சோடிப்பு |
| 6685 | 5 | 1935 | 150 | மு. தம்பிராசா புங்குடுதீவு கெட்டிக்காப்பு சோடி 1 |
| 6765 | 4 | 1935 | 200 | த. தேவாாசன் கன்றுநீட்டி வயிரஓலை சோடி 1 |
| 7144 | 6 | 1935 | 90 | மு. குமாரசாமி கோட்டடி கெட்டிக்காப்பு சோடி 1 |
| 7196 | 7 | 1935 | 13 | சி. கார்த்திகேசு புத்தூர் இ. ஓலைசோடி 1 |
| 7201 | 7 | 1935 | 50 | ஆ. தங்கம்மா கோட்டடி அர்சுக்காப்பு 2 |
| 7205 | 7 | ,, | 9 | பொ சின்னத்தம்பி நவாலி தாலி 1 |
| 7235 | 7 | ,, | 10 | கோ பொன்னுத்துரை அல்லபிட்டி கரிசமணி 1 |
| 7239 | 7 | ,, | 14 | சி குழந்தை கோட்டடி இமி ஓலை சோடி 1 |
| 7306 | 7 | ,, | 18 | சி கணபதிப்பிள்ளை சுளிபுரம் துண்டுவைத்த ½ பவுன் 2 |
| 7319 | 7 | ,, | 8 | S. சாகூல் அமீது சோனகதெரு கூடு 1 |
| 7346 | 7 | ,, | 5 | நா. அரியமுத்து பெரியகடை கூடு 1 |
| 7348 | 7 | ,, | 5 | த செல்லையா செம்மாதெரு கடுக்கன்சோடி 1 |
| 7416 | 7 | ,, | 12 | மு சோமு கோட்டடி இமி ஓலை சோடி 1 |
| 7450 | 8 | ,, | 95 | சி நாகநாதி சாவனை கெட்டி கொலுசு சோடி 1 |
| 7463 | 8 | ,, | 80 | வே சுப்பிரமணியம் வயாவிளான் பிலி காப்புசோடி 1 |
| 7524 | 8 | ,, | 25 | அ மு மொய்தீன் சாய்பு சோனகதெரு மணிக்கோர்வை1 |
| 7539 | 8 | ,, | 25 | த கதிராமுதம்பி தொல்புரம் முளதுகாப்பு 2 |
| 7617 | 8 | ,, | 65 | வ சுவாம்பிள்ளை சித்தங்கேணி டைமன் அட்டியல் பென்டனுடன் 1 |
| 7684 | 9 | ,, | 10 | ஆ மு செட்டி சிவன்கோவிலடி மனுக்கன் ஓலை 2 குச்சி 2 |
| 7718 | 9 | ,, | 100 | ஆ வி நாகலிங்கம் வேலணை காப்பு சோடி 2 |
| 7735 | 9 | ,, | 15 | க இராமலிங்கம் சிறம்பியடி பதைக்கம் 2 |
| 7763 | 9 | ,, | 20 | ச துப்புச்சாமி பெரியகடை வயிரமோதிரம் 1 |
| 7819 | 9 | ,, | 8 | க சோமு கோட்டடி வெ ஓலை சோடி 1 |
| 7849 | 9 | ,, | 45 | ம த யோசேப்பு நாவாந்துறை காப்பு துண்டு 3 |
| 7864 | 9 | ,, | 35 | K. M. மீறசாகிபு பறங்கித்தெரு துண்டுசங்கிலி 1 |
| 7897 | 10 | ,, | 70 | சா சண்முகத்தார் பெரியகடை வயிரபுறேச் 1 |
| 7983 | 10 | ,, | 10 | ஐ சின்னப்பிள்ளை கோட்டடி இமி ஓலை சோடி 1 |
| 7991 | 10 | ,, | 6 | பொ வேலுப்பிள்ளை ஆரியகுளம் காதுபூ 2 வாளி 2 |
| 7992 | 10 | ,, | 30 | நா பொன்னுத்துரை சாவகச்சேரி கவுத்தோர் 1 இ ஓலை சோடி 1 |
| 7993 | 10 | ,, | 110 | க நாகனுதி வேலணை ஒட்டுகோடி 1 |
| 8012 | 10 | ,, | 96 | க தம்பிப்பிள்ளை கோட்டடி ஒட்டு கோடி 1 |
| 8022 | 10 | ,, | 35 | தீ சூசப்பிள்ளை நாவாந்துறை சேற் 4 |
| C 19 | 11 | ,, | 75 | ஆ அந்தோனி கரையூர் ஒட்டுக்கோடி 1 |
| 26 | 11 | ,, | 5 | வி சிற்றம்பலம் புங்குடுதீவு மோதிரம் 1 |
| 34 | ,, | ,, | 20 | அ அப்துல்காதர் சோனகதெரு கூடு1 மோதிரம்1 காசு2 |
| 49 | ,, | ,, | 13 | க சாமி ஆனைப்பந்தியடி மோதிரம் 2 |
| 77 | ,, | ,, | 175 | த கதிராமுத்தம்பி தொல்புரம் வயிரஓலை சோடி 1 |
| 98 | ,, | ,, | 10 | சி நல்லையா கோட்டடி தாலி 1 |
| 103 | ,, | ,, | 75 | ச இளையதம்பி மானிப்பாய் மிளதுகாப்பு சோடி 1 |
| 117 | ,, | ,, | 8 | க முத்து முகம்மது செம்மாதெரு மணிக்கோர்வை 1 |
| 125 | ,, | ,, | 70 | மு மீறமெய்தீன் சோனகதெரு தாலி தடை 23 |
| 136 | ,, | ,, | 8 | க சின்னச்சி பூனகரி ஓலை சோடி 1 |
| 142 | ,, | ,, | 45 | வ இராசமுத்து நாவாந்துறை பின்கோர்க்கி 1 கடுக்கன் 2 |

விற்பனவு தாதுவருஷ மாசிமூ 2ந் திகதிக்குச்சரியான (13-2-37) சனிக்கிழமை காலை 10 மணிதொடக்கம் எடுபட்டநகை பிறநீங்கலாக மீதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்,

(Mis. 241. 25 & 28-1-37)


விஷய மதிப்புள்ள




சகல வியாபாரிகளிடமும் உள்ளன

Q. 209.
7-12 to 6-3-37.


## Notice of Sale by Court
## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திரிக்கோட்டின் 364 ம் இலக்கத் தத்துவ வழக்கில் 1937ம் ஆண்டு தை மீ 19ந் தேதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1937ம் ஆண்டு மாசி மீ 20ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வண்ணார்பண்ணை கிழக்கு காலஞ்சென்ற இராசநாயகம் பெண் நாகம்மாவின் ஆதனம். வண்கிழக்கு துரையப்பா இராசநாயகம் அந்துவகாரன்.

ஆதனவிபரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கிலுற குத்தகைத் தோட்டமும் இராச புலமும் குச்செக்லட்டியும் இதந தோட்டமும் என்னும் காணி பரப்பு நிலை இலாச்சம் 8 குளி 1 எல்லை கிழக்கும் வடக்கும் றோட்டு, மேற்கு வடிவேலு பெண் செல்லம்மாவின் உரிமைக்காரரின் ஆதனம், தெற்கு மாப்பாணி வல்லிபுரத்தின் ஆதனம், இவை முழுவதும்.

Veerasingham & Ramaswamy
கொம்மிஷனர்கள்
யாழ்ப்பாணம்
பெரியதெரு
21-1-37

(Mis 224. 25-1-37)

## குடியால் நேர்ந்த கேடு

### கோவிந்தனைக் கோவிந்தன் கொலை செய்தானு?

நமது நிருபர்

சென்ற 21-1-37ல் பகல், பளையில் ஓர் தோட்டத்தில் வசிக்கும் சின்னவன் கோவிந்தன் என்னும் இந்தியன் இன்னுமோர் இந்தியன் இராமன் கோவிந்தன் என்பவனோடு குடிவெறியின் நிமித்தம் ஏச்சுப்பட்டுச் சண்டை பிடித்தனராம். இச் சண்டையை அவ்வூர்ப் பழைய விதானையார் இரு பகுதியாரையும் விலக்குப் பிடித்து அனுப்பிவிட்டார். பின்னர், அன்று பிற்பகல் சின்னவன் கோவிந்தனுக்கு மற்றக் கோவிந்தன் மேற் கூறியவனுக்கு இடது விலாப் புறத்தில் ஓர் கத்தியாற் குத்திப் படுகாயப்படுத்திவிட்டான். காயக்காரன் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டான். அங்குள்ள டாக்குத்தர் அவனை யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர். 22-1-37 திகதி காலை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி காயக்காரன் ஆஸ்பத்திரியிலிருப்பதாக அறிவிக்கப்பட்டு அவனுடைய வாய்முறைப்பாட்டைப் பதிவு செய்தார். 22-1-37 இரவு மேற்குறித்த காயக்காரன் இறந்து விட்டதாகவும் செய்தி எட்டுகிறது.

## யாழ்ப்பாணக் கடையில் பொருள் விலைகள்

| | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|
| 1 | ஊர்நெல்லு புசல் | ... .... | 2 | 00 |
| 2 | சின்னரிக்கன் நெல் (மூடை) | .... | 5 | 25 |
| 3 | கறுப்பு | ,, ... .... | 5 | 69 |
| 4 | கடுகுசின்ன ,, | .... ... | — | |
| 5 | முத்துச்சம்பா அரிசி புசல் | 4 50, | 5 | 00 |
| 6 | கல்லுண்டை அரிசிபுசல் | ... | 3 | 75 |
| 7 | ரேரூஸ் | ,, ,, 4 00, | 4 | 25 |
| 8 | முழுப்பச்சை ஊர் | ,, ... | 4 | 50 |
| 9 | குறுநல்பச்சை | ,, ... | 3 | 75 |
| 10 | குத்தரிசி | ,, ... | — | |
| 11 | ஊர் அரிசி | ,, ... | 4 | 50 |
| 12 | மிளகாய் | இரு .... | | 24 |
| 13 | மல்லி | ,, .... | | 10 |
| 14 | மிளகு | ,, ... | | 28 |
| 15 | சீரகம் | ,, .... | | 36 |
| 16 | கடுகு | ,, .... | | 20 |
| 17 | வெந்தயம் | ,, ... | | 14 |
| 18 | உள்ளி | ,, ... | | 24 |
| 19 | பெருஞ்சீரகம் | ,, ... | | 24 |
| 20 | மஞ்சள் | ,, .... | | 20 |
| 21 | சுக்கு | ,, .... | | 72 |
| 22 | உழுந்து | படி ... | | 15 |
| 23 | பயறு | ,, ... | | 14 |
| 24 | கடலை | ,, 15, | | 20 |
| 25 | பருப்பு (துவரை) | ,, .... | | 20 |
| 26 | ,, (கடலை) | ,, .... | | 16 |
| 27 | ,, (உழுந்து) | ,, .... | | 20 |
| 28 | கோதுமை மா | இரு .... | | 10 |
| 29 | ,, ரவை | ,, .... | | 11 |
| 30 | சர்க்கரை (வேலூர்) | ,, ... | | 12 |
| 31 | ,, (ஜாவா) | ,, ... | — | |
| 32 | சீனி (கிறேப்) | ,, ... | | 11 |
| 33 | ,, (மா) | ,, ... | | 14 |
| 34 | கற்கண்டு | ,, ... | | 16 |
| 35 | கோப்பி 1-வது | ,, ... | | 36 |
| | ,, 2-வது | ,, ... | — | |
| 36 | தேயிலை 1-வது | ,, ... | | 40 |
| | ,, 2-வது | ,, .... | | 20 |
| 37 | சிலைக்காய் | ,, .... | | 14 |
| 38 | கர்ப்பூரம் (விளைவு) | ,, ... | 1 | 60 |
| | ,, (பாக்கெற்) | .... | | 03 |
| 39 | நெருப்புப்பெட்டி டசின் 06 | | | 07 |
| 40 | நெய் (தகர) | இரு .... | | 80 |
| 41 | தேங்காய்நெய்போத்தல் | ... | | 34 |
| 42 | எள்நெய் | ,, .... | | 45 |
| 43 | மண்ணெண்ணெய் | ,, ... | | 17 |
| 44 | தேங்காய் | 100 .... | 6 | 00 |
| 45 | வெங்காயம் | இரு .... | | 04 |
| 46 | பம்பாய் வெங்காயம் | ,, ... | | 07 |
| 47 | உருளைக்கிழங்கு | ,, .... | | 07 |
| 48 | கருணைக்கிழங்கு | ,, .... | | 06 |
| 49 | புளி | ,, .... | | 10 |
| 50 | உப்பு | ,, .... | | 04 |
| | ,, | படி. .... | | 12 |
| 51 | விறகு | அக்கு ... | 1 | 10 |
| 52 | பவுண் | ....22 | | 40 |
| 53 | வெள்ளி | .... | | 60 |

## கேரள சந்தன சோப்.

அழகான

மாதர்களுக்கேற்றது,


சருமத்திற்கு

அழகையும்

ஆரோக்கியத்தையும்

அளிக்கவல்லது





எல்லா

இடங்களிலும்

கிடைக்கும்

ஏஜன்ட்ஸ்:—

தேவார் அன்கோ,

57. மெயின் ஸட்றீற்,

கொழும்பு

யாழ்ப்பாணத்தில் இது பெறக்கூடிய இடங்கள்

N.M.S. சுல்தான் மொகிதீன் பிரதர்ஸ், பெரியகடை, யாழ்ப்பாணம்

மெடிக்கல் ஹால், பெரியகடை, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ் கம்பனி மெயின்ஸ்ட்ரீட், யாழ்ப்பாணம்

(Mis 156. 5-10-36 to .) தி


அழுக்கா றவா வெகுளி யின்னுச் சொல் நான்கும்
இழுக்கா வியன்ற தறம்


## மொரிஸ்—கம்மேர்ஷல்

ஏற்றுமதி இறக்குமதி வசதியில்

மிக்க முன்னணியில் நிற்பது

ஒவ்வொன்றும் மிகக் குறைவான

ஓட்டச்செலவோடு நீடித்தகாலப்பாவிப்புக்கும்

ஏற்றவிதமாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

எல்லாவிதமான வியாபாரத்திற்கும்

பொருத்தமான "ட்ரக்" இருக்கின்றது

விலைகளும் வேண்டிய பிற விபரங்களும்

பின்வரும் விலாசத்திற்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

உவாக்கர் ஸன்ஸ் அன்கோ, லிமிற்றட்

கொழும்பு.

யாழ்ப்பாணத்திற்கும்,

திருக்கோணமலை, முல்லைத்தீவு, புத்தளம், மன்னர், அநுராதபுரம்

ஆதிய இடங்களுக்கும் சோல் ஏஜெண்ட்ஸ்

வி. செல்வத்துரை & சன்ஸ்

அதிகாரம் பெற்ற ஏஜன்ஸி.

ஆஸ்பத்திரி ரோட்டு, யாழ்ப்பாணம்.

Y. 17 19.8-36. — 18-8-37. (தி)


நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று

## குழந்தைகளின் பெருமை

(பாலன் எழுதியது)

குழந்தைகள் வளர்வதை வளர்பிறைச் சந்திரனுக்கு ஒப்பிடுவது நம்மவர்களின் வழக்கம். குழந்தைகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்கின்றன என்றால் அது மிகையாகாது. வெயில் கடுமையில்லாத காலங்களில் தான் வளர்ச்சி நன்கு புலப்படுகிறது. இளம் பிராயத்தில் குழந்தைகள் தாய்மார்களுக்குப் பல வழிகளில் களிப்பூட்டுகின்றன. குழந்தையைப் பெற்றெடுத்த தாயோ சதா அக் குழந்தையைப்பற்றியே நினைவு கொண்டிருக்கிறாள். வாரி எடுத்து உச்சி மோந்து முத்தமிடுகிறாள்; சீராட்டிப் பாராட்டுகிறாள்; தாலாட்டுப் பாடித் தூங்க வைக்கிறாள். தன் குழந்தையைத் தான் பத்து மாசம் சுமந்தெடுத்ததை யிட்டுப் பெருமை கொள்ளுகிறாள். இளங் குழந்தைகள் அழுவதுகூட ஒரு அழகு. அவை முகத்தைப் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்துவிட்டால் நம் உள்ளத்தையே கொள்ளை கொள்ளுகின்றன. அவைகள் செய்யும் சின்னஞ்சிறு சேஷ்டைகள் இன்ப ஊற்றுகளாகும். குழந்தைகள் தவழும்போதும், தள்ளாடி நடக்கும் போதும், மழலையாடும்போதும் யார் தான் மகிழாதிரார்?

இத்தனை பெருமை வாய்ந்த குழந்தைகள் யாவை? இவர்கள்தான் எதிர்கால வீரர்கள், வருங்கால உலகத்தினர். ஆகையால் குழந்தைகளின் வளர்ச்சியில் தாய்மார்கள் விசேஷ அக்கறை கொள்ள வேண்டியது அவசியமாகிறது. குழந்தைகள் ஒரே விதமாய் வளர்ச்சியடைவது கிடையாது. அதற்குப் பரம்பரைக் குணநிசயங்களே காரணம் என்று ஒரு அறிஞர் கூறியிருக்கிறார். சில குழந்தைகள் ஒன்பதாவது மாதத்திலேயே பேச ஆரம்பித்து விடுகின்றன. வேறு சில ஊமைப் பிள்ளைகள்போல் இருந்து விடுகின்றன. அம்மா என்றுகூடச் சொல்லத் தெரியாதபடி சில குழந்தைகள் ஆறு மாசத்தில் எழுந்து உட்கார்ந்து கொள்கின்றன. வேறு சில வயதொன்றானாலும் இருந்த இடத்தை விட்டு அசைய முடியாதிருக்கின்றன. சாதாரணமாக ஆறு மாசமான குழந்தை நியதிப்படி எழுந்து நிமிர்ந்து உட்காரவேண்டும். ஒன்பது மாசத்தில் வேகமாய்த் தவழவேண்டும். ஒரு வயதில் பிடித்துக்கொள்ளாமல் சில அடிகள் எடுத்து வைக்கலாம். இவை எல்லாம் சாதாரண குழந்தைகளின் வளர்ச்சிக் குறிகள். குழந்தை முக மலர்ச்சியுடனிருந்து நன்றாய் விளையாடிக்கொண்டிருந்தால் அதற்கு ஒரு குறைவுமில்லை. ஆனால், சோர்ந்து படுத்துக்கொண்டாலும் விடாமல் அழுதாலும், ஏதோ கோளாறு இருப்பதாகத் தெரிந்து கொண்டு கவனித்துப் பார்க்க வேண்டும். அநேகமாகக் குழந்தைகளில் இருவித தோஷங்களிருக்கலாம் இவை எளிதில் நிவர்த்திக்கக் கூடியவை. சில முழங்கால் உராய்ந்து சோடி போட்டு நடக்கின்றன. சில குழந்தைகளின் கால்கள் வில்லுகளைப்போல் வளைந்திருக்கின்றன. அப்படியே விட்டுவிட்டால் வயதாக ஆக உடம்பு முற்றி இத் தோஷங்கள் நிலைத்து விடும். கால்களை உருவி விடுவது நல் உணவைக் கொடுப்பது. பழரசம், பிஞ்சுக் காய்கள், இவைகளைக் கொடுப்பதால் இத் தோஷங்களைக் களைந்துவிடலாம். ஓடுகிற குழந்தைகளை எப்பொழுதும் எடுத்து வைத்துக்கொள்வது மதியீனம். குழந்தைகளை எப்பொழுதும் தாராளமாய் நல்ல காற்றில் ஓடி விளையாட விடவேண்டும். அதனால் நல்ல வளர்ச்சியும் பழக்கமும் பலமும் ஏற்படுகின்றது. குழந்தையின் தலை உச்சி ஒரு வருடத்திற்குள் நன்றாய் மூடிக் கெட்டியாய் விடவேண்டும். அப்படியில்லாவிட்டால் புஷ்டியான ஆகாரத்தைக் கொடுக்கவேண்டும். பற்கள் கெடுகாட்கள்வரை முளைக்காதிருந்தால் அப்பொழுதும் ஆகார விஷயத்தைக் கவனிக்க வேண்டும். குழந்தைகளின் உடம்பின் மேல் துணிகளைச் சுமத்தாமல் சூரிய வெப்பம், காற்று இவை தாராளமாய்ப் படும்படி விடவேண்டும்.

## சைவபரிபாலன சபை

### 1921-ம் ஆண்டில் நிகழ்ந்தவை

(18-1-37ன் தொடர்)

The following passed the Junior:—S. Karthikesu (First Class honours and distinctions in History, Mathematics and Physics.) S. Kumaraswamy (Third Class honours and distinction in Mathematics) N. Sivaprakasam (distinction in Tamil) S. Perayiramudayan, M. Ramalinga Iyer, R.V. Kanagasabai, N. Ponniah, K. Mailvaganam, M. Ramuppillai, S. Vythianathan, S. S. Suppiramaniam, K. Sivasithamparam, V. S. Velauthapillai (distinction in Latin) T. Selvaratnam, S. Kanagasapapathy, S. Elaiyatamby, M. Kanagasingam, V. Sivagurunathan, E. K. N. Selvadurai, V. Rasiah, S. Suntharamoorthy, S. Suppiramaniam, S. Iragunatha Iyer, S. Saravanabavan and S. Souraja."

"XVI. Annual General meeting of the Board of Directors of the Jaffna Hindu College was held on the 13th May, 1921 under the Presidency of the Hon'ble Sir A. Kanagasabai. The statement of accounts and balance sheet to the end of June 1920 which was previously printed and circulated was taken as read after discussion was adopted. The Auditors report was read and certain of the remarks of the Auditors were left to the Committee to inquire into and to report to the next quarterly General Meeting. The Secretary's Report was read and adopted. The Budget to the end of June 1921, was considered and passed. Mr. Thamotharampillai's school at Chavakachcheri was to be taken over by the Board as one of its Branch schools. The Standing Committee and M. Muttucumaraswamy Mudlr. were to finally arrange the conditions of taking over the school and get the necessary deeds and security before taking charge of the school. Mr. A. Visuvanathan, B. A., Deputy Fiscal, N. P. was unanimously elected a member of the Board viceMr.M.Canagasabai deceased section A retired. Messrs. M. Somasundaram, Maniagar of Islands, and A. Ambalawaner. Proctor, were elected members of the Board. Election of office-bearers were resulted as follows:— President: The Hon'ble Sir A. Kanagasabai; Vice-President: Mr. V. Casippillai; Secretary: S. Sabaratna Mudaliyar; Asst. Secretary: Mr. S. Rajaratnam; Treasurer: Mr. V. S. S. Kumaraswamy; Committee besides the above office-bearers, the Manager Mr. A. Sapapathy ex-officio and the Hon'ble Mr. W. Duraiswamy, Mr S. Kandayya and M. S. Ramalinga Mudaliar. Auditors: Mr. A. Visuvanathan and Mr. E. Kathiravelu. Visitors R. Kantayah Mudaliar and Mr. S. Katiresu."

"Mr. N. Selvadurai B. A., Principal of the Jaffna Hindu College was invested at the Levee by His Excellency the Governor with the rank of Justice of the Peace for the Jaffna District."

சித. மு. ப. சிதம்பரநாதச்செட்டியார் 1921 ஆ ஆனி மாதம் தமது சொந்தச்செலவில் நடராஜ தரிசனத்துக்காகச் சிதம்பரத்துக்குச் சென்றபோது இந்துசாதன (சைவப்பிரகாச) யந்திரசாலையிலிருந்த தேய்ந்த அச்செழுத்துக்களை யெல்லாம் சென்னைப் பட்டணத்துக்கு எடுத்துச்சென்று புது எழுத்துக்களும் வார்ப்பித்து வந்தார்.

"XVI. PRIZE-GIVING

The annual prize-giving of the Jaffna Hindu College for the year 1920 came off on Monday, the 25th July 1921. Mr. B. Constantine, the Government Agent, was on the chair and Mrs. Constantine distributed the prizes. The proceedings opened with the singing of Thevaram and action song by seven boys of the Primary Department in which they welcomed the audience. The Principal then read his long and interesting report dealing with the many sided activities of the College and suggesting many reforms. Thevarams were then recited by the Prize-winners and the distribution of prizes began, monotony of which was now and then relieved by smart and comic songs, dialogues and declamations by the boys of the College. The certificates of the students who were successful in the last University Examinations were then distributed. Speeches were delivered by Mr. Constantine and Messrs Cornish Peto, and Proctor C. Perumalpillai, an old boy of the college. All of them spoke of the excellent work done in the College in the training of the students in their national lines and to make them fit to take up increasing political responsibilities. The function closed with a vote of thanks to Mr. and Mrs. Constantine for kindly consenting to distribute the prizes."

1912 ஆ ஆடிமீ முதல் இந்துசாதன ஆங்கில உதவிப் பத்திராசிரியராயிருந்து அரிய தொண்டாற்றிய

ச. சிவகுருநாதர்

1921 ஆ ஆவணிமீ 17உ தேகவியோகமாயினர். அதைக் குறித்து பத்திராசிரியர் அ. சபாபதி எழுதியது இது:—

"It is our most painful duty to record the death of this gentleman, Assistant Editor of the "Hindu Organ" which took place on the 17th August, 1921, after a brief illness at his residence in Vannarponnai. Mr. Sivagurunather, was connected with this paper for about quarter of a century, as a contributer, and latterly as Assistant Editor. It may not be generally known that during the last two or three years Mr. Sivagurunather was practically the Editor of the "Hindu Organ" Mr. Sapapathy, the Editor, having been owing to want of time and protracted illness during the whole of 1920, unable to take any active part in editing the paper. The former continued to do so till about two weeks ago when he fell ill with a severe attack of asthma which developed serious symptoms and complications which terminated fatally.

How well Mr. Sivagurunather edited the "Hindu Organ" is known to its readers. He was a gentleman of great public spirit, vast information and close student of world politics. He was also a good Tamil and Sanscrit sholar and one well versed in the Hindu Shastras. His unexpected and untimely death is therefore a great loss to the Hindu community in particular ... Tamil co...

## யாழ்ப்பாணம் ஐக்கியலாப நிதி.

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,367 00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

**பங்குப்பணங் கட்டுமுறை.**

மாதமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறுங் கட்டா மலமொன்று தவறாமல் கட்டி முடிந்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு.**

எச்சமிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 1 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்களுக்கேற்ற வாறு வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.**

**கடன்.**

நகைகளை ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடன்கொடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.

(Y·225. 21·11·36—20·11·37) (தி.) மானேஜர்.



## மாணுக்கர்க்கு ஆவசியகம் வேண்டிய நூல்கள்

1. கநிஷ்டபாடசாலை விடுகைத் தராதரப் பத்திரவகுப்பு (J. S. C) இலக்கியக் குறிப்பு, விலை சதம் 80.
2. சிரேஷ்ட பாடசாலை விடுகைத் தராதரப்பத்திர வகுப்பு (S. S. C.) இலக்கியக் குறிப்பு, விலை சதம் 75.

இவை வண்ணார்பண்ணை நாவலர் கலாசாலைத் தலைமையாசிரியர், 'வித்துவான்' ஸ்ரீ ந. சுப்பையபிள்ளை அவர்கள் எழுதிய பதவுரை, கருத்துரை, இலக்கணக் குறிப்பு முதலியவைற்றை அடக்கியுள்ளன.

1937ம் ஆண்டில் நிகழவிருக்கும் மேற்படி பரீட்சைகளின் பாடமாக விதிக்கப்பட்டுள்ளன.

3. செந்தமிழ் வாசக சிந்தாமணி

உயர்தர வகுப்புகளுக்கு உபயோகமானது; அரும்பத விளக்கமும், செய்யுள்களுக்கு உரையும் நன்கு எழுதப்பட்டுள்ளன. விலை சதம் 75.

4. இரண்டாந்தரக் கணிதம்

வித்தியாபகுதியாரின் புதிய நிபந்தனைகளுக்கிணங்க, கணிதாசிரியர் மிஸ்ரர் V. E. சரவணமுத்து அவர்கள் இயற்றியது. 160 பக்கங்கள் வரையிற் கொண்டது பல சித்திரப் படங்களுடன் பெரிய அட்சரத்தில் தெளிவுற அச்சிடப்பெற்றது. இந்தமுறையாக எழுதப்பட்ட புத்தகம் முன் வெளிவந்ததில்லை. விலை சதம் 35

☞ ஏனைய வகுப்புகட்குரிய கணிதங்கள் அச்சிலிருக்கின்றன.

5. கோபால் புதிய தமிழ்வாசகம் ஆரும் புத்தகம்

விலை சதம் 44. (அஞ 7)

6. கோபால் புதிய தமிழ்வாசகம் ஏழாம் புத்தகம்

விலை சதம் 50 (அஞ 8)

இவ்வாசகங்களிரண்டும் இலங்கை வித்தியாசாலைகளுக்கு ஏற்ற முறையில் சித்திரப்படங்களுடன் அழகுற அச்சிடப்பட்டுள்ளன.

7. மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம்

ஸ்ரீ. ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதியது; திருவாசகத் திரட்டுடன் விலை சதம் 50.

சண்முகநாதன் புத்தகசாலை.

Mis 12. 13-4-36.) தி வண்ணார்பண்ணை.



## ஈடு அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் சுதுமலை வடக்கு மானிப்பாய் வே. க. இராசலிங்கம் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

1935ம் ஆண்டு 10ம் மாசம்

| நம். | தி. | ரூ. | ச. | பெயர் ஊர் நகைகளின்விபரம் |
|---|---|---|---|---|
| 74 | 8 | 8 | | சி. கிட்ணபிள்ளை சுதுமலை காதோலை சோடி 1 |
| 96 | 14 | 10 | | சி. சின்னச்சி மானிப்பாய் மோதிரம் 4 |
| 101 | 16 | 60 | | ந. இராசரத்தினம் மானிப்பாய் துண்டுச் சங்கிலி 1 |
| 119 | 23 | 20 | | ஆ. சின்னட்டி மானிப்பாய் கடுக்கன் சோடி 3 |
| 11ம் மாசம் | | | | |
| 151 | 7 | 55 | | வ. நாகமுத்தன் மானிப்பாய் முறிச்சுகீ குத்தி யட்டியல் 1 |
| 164 | 11 | 12 | 35 | சே. சின்னத்தம்பி சுதுமலை காதோலை சோடி 1 |
| 173 | 13 | 15 | 20 | சி. கந்தசாமி சுதுமலை கவுத்தோர் 1 |
| 12ம் மாசம் | | | | |
| 234 | 2 | 45 | | த. சின்னத்துரை உடுவில் காப்பு சோடி 1 |
| 235 | 2 | 6 | | வே. தம்பிமுத்து உடுவில் காதோலை சோடி 1 |
| 239 | 3 | 8 | | க. அன்னம் மானிப்பாய் கடுக்கன் சோடி 1 |
| 266 | 9 | 30 | | வி. குலசேகரம்பிள்ளை உடுவில் மோதிரம் 1, கவுத்தோர் 1 |
| 290 | 15 | 12 | | கு. சின்னப்பு சுளிபுரம் காதோலை சோடி 1 |
| 292 | 17 | 8 | | சி. செல்லையா கந்தரோடை மோதிரம் 1, சொண்டைப்பூ 1 |
| 319 | 23 | 125 | | மு. இளையதம்பி இணுவில் முறிச்சுக்குத்தித் தாலிக்கொடி 1 |
| 350 | 29 | 17 | | நா. அறுமுகம் சுதுமலை கு காப்பு சோடி 1, அச்சரம் 1 |
| 354 | 30 | 15 | | த. நாகமுத்து மானிப்பாய் மோதிரம் 1 |
| 1936ம் ஆண்டு 1ம் மாதம் | | | | |
| 362 | 1 | 13 | | சி. குணரத்தினம் உடுவில் குளந்தைக்காப்பு சோடி 1 |
| 367 | 2 | 12 | | த. சுந்தையா இணுவில் காதோலை சோடி 1 |
| 384 | 9 | 10 | | க. கதிர்காமு இணுவில் புலிப்பல்லுக் கட்டிய கூடு 1 |
| 413 | 18 | 20 | | நா. செல்லப்பா சுதுமலை துண்டோட்டிய அரைப்பவுண் 2 |

விற்பனவு:— தாது வருஷம் தை மாதம் கஅந் திகதிக்குச் சரியான (31-1-37) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறநீக்கலாக மிகுதி [illegible]த்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

க. பெரியதம்பி

ஏலவிற்பனவுகாரர்.





மலேரியா என்னும் மலைச்சுரத்தை

மாற்றவும் தடுக்கவும்

## பைரெக்ஸ்

எவரும் ஒத்துக் கொள்ளக்கூடிய மிகச் சிறந்த விலை குறைந்த சுரத்தைப் போக்கடிக்கும் ஔஷதம்

கோடிக் கணக்கான மக்கள் சாப்பிட்டுப் பார்த்தது; எல்லோரும் கருதிய பலனைத் திருப்திகரமாகப் பெற்ற மருந்து

இதனை ஒழுங்காக உபயோகிப்பதால் மலேரியாவையும்

காலத்துக்குக் காலம் உண்டாகும்

மற்றைய சுரங்களையும்

**நிச்சயமாகத் தடுக்கும்.**

பெங்கால் கெமிக்கல்: கல்கத்தா

சிலோன் ஏஜெண்ட்ஸ்:- தேவர் அன்கோ

57, மெயின்ஸ்ட்ரீட், கொழும்பு

Mis 156. 5-10-36 to


நருதற்பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்

மேற்சென் றிடித்தற் பொருட்டு


## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக, பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக்குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபத்திகளைப் புங் கொடுத்திருக்கிறார்கள். இதை யான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அபகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டிபான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீரும் ன் இரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தலொன்றுக்கு ரூபா உ0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ஐ. தபாற்செலவு பிரத்தியேகம், சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மணிஓடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,

க. ஆறுமுகம்பிள்ளை,

ஸ்ரீ வெஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,

வீட்டு இலக்கம் 33

பழைய வாடிரோட்டு

கோட்டமுனை

மட்டக்களப்பு, சிலோன்.

Y 46 1-1-37 to 31-12-37)



## விளம்பரம்

உ

சிவமயம்

முகாந்திரம்

சி. எஸ். கே. கந்தையாச்செட்டியார்

பிரிட்ஜ்ஸ்டோன் டயர் ஏஜெண்டு,

யாழ்ப்பாணம்.

ஜப்பான் சயிக்கிள் சாமான்களும் கார்ச்சாமான்களும், சயிக்கிள்களும், பிள்ளைகளின் விளையாட்டுச் சாமான்களும் (toys) சகாயமான விலைக்கு இங்கே விற்கப் பெறும்.

வியாபாரிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாயமான விலைக்கு எம்மிடம் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

Mis 163 தி






Y 44. 31-12-37.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai, West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna on Monday, January 25th 1937.